விலை ரூ. 50 பக்கங்கள் 12

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 118

வெள்ளிக்கிழமை 24 மார்ச் 2023

பங்குனி 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"சுட்டுப்போட்டாக்கூட அறிவுவராத அரசாங்கம் இப்பிடி ஐ.நா.வில சுட்டிக்காட்டினா மட்டும் திருந்திடுமோ?"

# இந்திய மீனவர்களின் அத்துமீறல் மன்னாரில் நேற்றுப் போராட்டம்!



மன்னார், மார்ச் 24
வடக்குக் கடற்பகுதியை இந்திய மீனவர்களுக்குக் குத்தகைக்கு வழங்குவதைக் கண்டித்தும், இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகவும் மன்னாரில் நேற்றுப் பெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. »11

## மதக் கூட்டமொன்றை எதிர்த்துப் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
மானிப்பாயிலுள்ள தனியார் ஆங்கிலப் பாடசாலையொன்றில், இந்தியாவில் இருந்து வருகைதந்துள்ள போதகர் ஒருவரின் »11



## இன ஒற்றுமைக்காக பிக்கு நடைபயணம்!

யாழ்ப்பாணம், மார்ச் 24
நாட்டில் இனங்களுக்கு இடையிலான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் வலியுறுத்தி, வெலிமட சதானந்த தேரர் நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார். »11

போர் முடிவடைந்து 13 ஆண்டுகளின் பின்னரும்

# சிறிலங்கா அரசாங்கத்தின் இனவழிப்பு தொடர்கின்றது

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கஜேந்திரகுமார் எம்.பி. சுட்டிக்காட்டு

சூரிச், மார்ச் 24
சிறிலங்காவில் ஆயுதமோதல் முடிவடைந்து 13 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட – நன்கு கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு நடவடிக்கைகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சுட்டிக்காட்டியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம். »11

## ஏழு நிறுவனங்களில் உள்ள பங்குகளை விற்கிறது அரசு!

கொழும்பு, மார்ச் 24
ஏழு நிறுவனங்களிலுள்ள அரச பங்குகளை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது. »11

## சகோதரியின் நகைகளை திருடிய நபர் கைதானார்

யாழ்ப்பாணம், மார்ச் 24
சகோதரியின் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் உரும்பிராய் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
ஐந்தரைப் பவுண் நகைகளைத் திருடிய சந்தேக நபர் அதை அடகுவைத்துக் கிடைத்த »11

## யாழ்ப்பாணப் பல்கலையில் மின்பொருள் கையாடல்

பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ். பல்கலைக்கழக களஞ்சியசாலையில் இடம்பெற்ற சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மின்பொருள் கையாடல் குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். »11

உள்ளூராட்சித் தேர்தல்

## தபால் வாக்கெடுப்பு மீண்டும் பிற்போடல்

கொழும்பு, மார்ச் 24
உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட திகதிகளில் நடக்காது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. »11

## மின்சாரம் தாக்கியதில் பெண்ணொருவர் சாவு!

முல்லைத்தீவு, மார்ச் 24
முல்லைத்தீவு - மல்லாவி, கொல்லவிளாங்குளம் பகுதியில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் நேற்று வியாழக்கிழமை உயிரி »12

## கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட பொலிஸார்!

கொழும்பிலிருந்து வந்த குழுவால் நேற்றுக் கைது

கிளிநொச்சி, மார்ச் 24
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மகேணிப் பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். »11

அபிவிருத்தி அலுவலர்களை

# ஆசிரியசேவைக்குள் உள்ளீர்க்கும் போட்டிப்பரீட்சை இடைநிறுத்தம்!

கொழும்பு, மார்ச் 24
அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ள பட்டதாரிகளை, ஆசிரியர் சேவைக்கு இணைப்பதற்கான போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.
பட்டதாரிகள் சங்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான பரிசீலனை நிறைவு செய்யப்படும் வரை போட்டிப் பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு நீதியரசர்கள் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாணவர் ஒன்றியம் மனு எதையும் தரவில்லை

## வசந்த முதலிகே தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 24**

**கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சந்திப்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் எழுத்துமூமான எந்த யோசனையும் தமக்கு வழங்கப்படவில்லை என்று அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.**

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்துத் தெரிவித்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அ.விஜயகுமார் தமிழ்ச் சமூகத்தைப் பாதிக்கும் 10 அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக தென்னிலங்கை மாணவர் சங்கத் தலைவர்களிடம், விளக்கமளித்து எழுத்துமூலம் பிரேரணை வழங்கப்பட்டது என்றும், பிரேரணையில் உள்ளடங்கியுள்ள தமிழ் மக்களை ஒடுக்கும் பிரச்சினைகளுக்காக போராடினால் தென்னிலங்கையில் போராட்டங்களில் ஈடுபடுவது தொடர்பாக பரிசீலிக்கமுடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தெற்கு ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளித்த வசந்த முதலிகே, "எங்களுக்கு வடக்கு, தெற்கு என இரண்டு போராட்டங்கள் இல்லை" என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மக்களுக்கு குறிப்பாக வடக்கில் உள்ள தமிழ் மக்களுக்கு பல விசேட பிரச்சினைகள் உள்ளன.

இன்று தென்னிலங்கை மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதச் சட்டம் பல தசாப்தங்களுக்கு முன்னர் வடக்கு மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டது. யுத்தம் நிறைவடைந்த போதிலும் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட வடக்கு மக்களின் காணி இன்னும் வழங்கப்படவில்லை. சரணடைந்த ஆயிரக்கணக்கான சிறுவர்கள் காணாமற் போயுள்ளனர். இருந்தாலும் இல்லாவிட்டாலும் என்ன நடந்தது என்பது கூட எமக்குத் தெரியாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பல தசாப்தங்களாக ஒரு வழக்குக் கூட இன்றி சிறையில் வாடும் அரசியல் கைதிகள் ஏராளமாக உள்ளனர்.

இவை அடிப்படைப் பிரச்சினைகளில் சில மட்டுமே. பல்கலைக்கழக மாணவர்களான வடக்கு மக்களின் இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக தென்னிலங்கை சமூகத்தில் உரையாடலையும் போராட்டத்தையும் உருவாக்குவதற்கான தொடர் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம்.

ஏற்கனவே சம உரிமை இயக்கத்துடன் இணைந்து அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று போராட்டங்கள் மற்றும் பேரணிகளை ஏற்பாடு செய்தோம். கேப்பாபுலவில் போராட்டங்கள் செய்தோம். விசேட நடவடிக்கைகளில் யாழ்.மாணவர் சங்கமும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளது. 'சைட்டம்' போராட்டத்துக்காக பேருந்தில் கொழும்பு வந்தனர்.

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் போராடும் தென்னிலங்கை மக்களும், தென்னிலங்கை மக்களுடன் இணைந்து போராடும் வடபகுதி மக்களும் தற்போதுள்ள இழிவான இனவாத பொறியில் இருந்து எமது சமூகத்தைக் காப்பாற்றவேண்டும். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இத்தகைய தொடர்ச்சியான முயற்சியில் இந்தச் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டது - என்றார். (எ-இ)



யாழ்ப்பாணம் வண்ணை அரசடி விநாயகப் பெருமான் தேவஸ்தானத்திலுள்ள அரசமரத்தில் பிள்ளையார் போன்ற வடிவம் தோன்றியுள்ளது. அதனை அடியவர்கள் பலரும் பார்வையிட்டு வணங்கிச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-14)

# சுகாதார அமைச்சை பொறுப்பேற்கத் தயார்

## ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

புதிய அமைச்சரவையில் சுகாதார அமைச்சு கிடைத்தால் அதைப் பொறுப்பேற்கத் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசுடன் ராஜித இணையப்போகின்றார் என்று நீண்ட நாள்களாக பேசப்பட்டுவரும் நிலையில், அவர் விரும்பும் சுகாதார அமைச்சு கிடைக்காமையாலேயே அவர் அரசுடன் இணைவது தாமதமாகின்றது என்று அரசியல் வட்டாரத்தில் பேசப்படுகின்றது. இது தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அதேவேளை, கடந்த நல்லாட்சி அரசில் ராஜித சுகாதார அமைச்சராகப் பதவி வகித்திருந்தார். (எ-22)

# பளை குடிதண்ணீர்த்திட்டத்துக்கு நீர்க்குழாய்களை விடுவியுங்கள்

## பிரதமரிடம் கோரிக்கை

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்குரிய நீர்க்குழாய்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன. அதனை விடுத்து பளை குடிதண்ணீர் விநியோக நடவடிக்கையை முன்னெடுக்க வழிவகை செய்யவேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மு. சந்திரகுமார் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

பளையில் ஏற்கனவே நீர்த்தாங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்த நீர்த்தாங்கி கிளிநொச்சி நீர்த்தாங்கியுடன் இணைக்கப்படல்வேண்டும். அதன்மூலமே கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகத்தை வழங்கமுடியும்.

அதற்காக ஏ-9 பிரதான வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து பளை நீர்த்தாங்கி வரை 26 கிலோமீற்றர் தூரத்துக்கு குழாய்கள் பதிக்கவேண்டும்.

வடக்கு மாகாணத்துக்கு அண்ணளவாக 350 கிலோமீற்றருக்கான நீர்க்குழாய்கள் 188 கொள்கலன்களில் துறைமுகத்தில் தேங்கியுள்ளன. அதனை விடுவிப்பதற்கு 1.8 பில்லியன் ரூபா துறைமுக அதிகாரசபைக்குச் செலுத்தவேண்டும். ஆனால் பளை குடிதண்ணீர்த்திட்டத்துக்கு 26 கிலோமீற்றருக்குரிய குழாய்கள் மாத்திரமே தேவைப்படுகிறது.

எனவே, முதற்கட்டமாக பளை குடிதண்ணீர்த்திட்டத்துக்கான குழாய்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச-213)

# கருச்சிதைவு காரணமாக சிசுவை வீசியிருக்கலாம்!

## யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24

பெண்ணொருவருக்கு ஏற்பட்ட கருச்சிதைவு காரணமாக சிசுவை வீசியிருக்கலாம் என யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.போதனா மருத்துவமனையில் 22ஆம் இலக்க விடுதிக்கு அருகில் வீசப்பட்டிருந்த சிசுவின் கரு தொடர்பில் ஊடகங்கள் வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மருத்துவமனையின் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட பெண்கள் எவரும் இவ்வாறான விடயங்களில் சம்பந்தப்படவில்லை.

மருத்துவமனைக்கு வருகை தந்த பெண்ணொருவருக்கு கருச்சிதைவு ஏற்பட்டதன் காரணமாக பாவனையற்ற மலசலகூடத் தொகுதியில் வீசி இருக்கலாம் என நம்புகிறோம்.

மீட்கப்பட்ட சிசுவின் கரு சட்ட மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸாரிடம் இந்த விடயம் தொடர்பில் அறிவித்துள்ளோம். விசாரணைகள் இடம்பெறுகின்றன - என்றார். (ச-20)

உலக நன்மை வேண்டி

# ஒரு கோடி தரம் சிவநாம ஜெபம்

உலக நன்மை வேண்டியும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் விடிவை வேண்டியும் இந்து சமயப் பேரவையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் நடராஜர் ஆலயத்தில் தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும் மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும் ஒரு கோடி தடவை சிவநாம ஜெபம் உச்சரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலந்துகொள்ள முடியாதவர்கள் தத்தம் வீடுகளில் இருந்தவாறே பக்தி உணர்வுடன் கடதாசியில் பேனாவால் எழுதி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் எமக்குக் கிடைக்கக்கூடியதாக இந்து சமயப் பேரவை, 51 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் ஈசான சிவ சக்திகிரீவன் அறிவித்துள்ளார். (ஒ-14)

# பிளாஸ்ரிக் பொருள்களுக்குத் தடை

கொழும்பு, மார்ச் 24

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சில பிளாஸ்ரிக் பொருள்களை எதிர்வரும் ஜூன் மாதம் முதல் தடைசெய்ய சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

பிளாஸ்ரிக் கப், கரண்டி, தட்டுகள், முட்கரண்டி, மாலைகள் மற்றும் பாய்கள் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்படவுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு பிளாஸ்ரிக் கழிவுகளை வெளியிடுவதை குறைக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையானது சுற்றுச்சூழலை பாதிக்காத பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலாளரை ஊக்குவிக்கும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடமாடும் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவ குழாமினரால் தீவகப் பிரதேசங்களில் நடமாடும் மருத்துவ சேவையை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதன் முதற்கட்டமாக நெடுந்தீவு பிரதேச மருத்துவமனையில் மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் யாழ்.போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர்கள், துறைசார் மருத்துவ அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் மருத்துவ முகாமில் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களை இனங்காணும் பரிசோதனைகளும் இடம்பெறவுள்ளன. எனவே நெடுந்தீவுப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஒ-14)

## பிரிட்டன் டியாகோ கார்சியாவில்

# உயிர்மாய்க்க முயன்ற இலங்கை ஏதிலிகள்

**கொழும்பு, மார்ச் 24**

**பிரிட்டனின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தியப் பெருங்கடல் தீவான டியாகோ கார்சியாவில் உயிரை மாய்க்க முயன்ற ஐந்து தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் மருத்துவ சிகிச்சைக்காக ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று தி நியூ ஹியூமனிடேரியன் செய்தி வெளியிட்டுள்ளது.**

மருத்துவ சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட 5 தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள், ருவாண்டா தலைநகர் கிகாலியில் உள்ள ருவாண்டா இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் டியாகோ கார்சியாவில் 18 மாத சிறைவாசத்தின் போது ஏற்பட்ட காயங்கள் மற்றும் பிற நோய்களுக்காக உளவியல் சிகிச்சை மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

புகலிடக்காரர்களின் உயிர்மாய்ப்பு முயற்சி குற்றச்சாட்டுகள் உண்மையாக இருந்தால், பிரிட்டன் அதிகாரிகள் தங்கள் பிரதேசத்தில் உள்ள புகலிடக் கோரிக்கையாளர்களின் உடனடி நலனுக்கான அனைத்து விருப்பங்களையும் கருத்திற்கொள்ள வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தகவல் தொடர்பு ஒருங்கிணைப்பாளர் எமிலி மெக்டொனெல் கோரிக்கை விடுத்துள்ளார்.

22 வயதான யுவதி ஒருவர் தாம் கடந்த மார்ச் முதலாம் திகதி உயிரை மாய்க்க முயன்றேன் என்று தி நியூ ஹ்யூமனிடேரியனிடம் தெரிவித்துள்ளார். சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளேன் என்று பிரிட்டன் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்ததன் காரணமாகவேதான் அந்த முயற்சியை எடுத்தேன் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதே நாளில், அவரது சக புகலிடக் கோரிக்கையாளர்களில் ஒருவர் தையல் ஊசியை பாதியாக உடைத்து இரண்டு துண்டுகளையும் விழுங்கியுள்ளார்.

தீவில் மூன்று பேர் மார்ச் 13 ஆம் திகதி இதேபோன்ற வழிகளில் தற்கொலைக்கு முயன்றனர் என்று ஹம்ஷிகா கூறியுள்ளார். இதேவேளை மார்ச் முதலாம் திகதியன்று தற்கொலைக்கு முயன்ற இந்த யுவதியும் மற்ற புகலிடக்கோரிக்கையாளர்களும் முறையே இலங்கை மற்றும் இந்தியாவில் பாதுகாப்புப் பிரிவாலும் பொலிஸாராலும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகியுள்ளனர் என்று கூறியுள்ளனர்.

இந்த ஐவர் உட்பட 89 பேர் இலங்கை மற்றும் இந்தியாவை விட்டு வெளியேறி, கனடாவை அடைய முயன்றபோது, அவர்களது படகு அருகிலுள்ள கடற்பரப்பில் பழுதடைந்தது. அதையடுத்து பிரிட்டன் படையினர் அவர்களை மீட்டு தீவில் வேலி அமைக்கப்பட்ட முகாமில் தடுத்து வைத்தனர். இந்தப் புகலிடக் கோரிக்கையாளர்களில் சிலர் இந்தியாவில் உள்ள ஏதிலி முகாம்களில் உள்ள இலங்கை பெற்றோருக்கு பிறந்தவர்கள், அங்கு அவர்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது.

டியாகோ கார்சியா என்பது பிரித்தானிய இந்தியப் பெருங்கடல் பிரதேசத்தில் 27 சதுர கிலோமீற்றர் பரப்பை கொண்ட பிரதேசமாகும். இது மொரிஷியஸ் மற்றும் சீஷெல்ஸில் உள்ள பிரித்தானிய குடியேற்றத்துடன் ஒன்றாக இணைக்கப்பட்ட பகுதியாகும். தீவின் பூர்வீக சாகோசியன் மக்கள் 1960 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் பிரதேசத்தில் பிரிட்டன் - அமெரிக்க கூட்டு இராணுவ தளத்தை அமைப்பதற்காக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். (எ-இ)

## மருத்துவமனையில் மோதல் இருவருக்கு ஒரு மாத சிறை


யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது கைகலப்பில் ஈடுபட்ட இருவருக்கு ஒருமாத கடூழிய சிறைத்தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற இருவர் நேற்றுமுன்தினம் தொடர்ச்சியாக மோதலில் ஈடுபட்டனர்.

மருத்துவமனை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மோதலைத் தடுத்து நிறுத்தியதுடன் மோதலில் ஈடுபட்ட இருவரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

பொலிஸார் அவர்களை நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவருக்கும் தலா ஒரு மாதம் சிறைத்தண்டனை விதித்து நீதிவான் ஏ.ஆனந்தராஜா தீர்ப்பளித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)



உலக நீர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் விழிப்புணர்வு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையால் ஒட்டப்பட்ட இந்தச் சுவரொட்டிகளில் தண்ணீரை 'சேமிப்பதும், பாதுகாப்பதும் எமது உரிமை' என குறிப்பிடப்பட்டிருந்தது. (ச-66)

## விபத்தில் கைதான சாரதிக்கு மறியல்!

யாழ்ப்பாணம், மார்ச் 24

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் கைதான சாரதிக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குடத்தனை சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை பார ஊர்தியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்து நிகழ்ந்தது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணித்த பெண்ணொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறைப் பொலிஸார் பார ஊர்தி சாரதியைக் கைது செய்தனர். அதனையடுத்து அவரை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்படுத்தியபோது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பொ.கிருஷாந்தன் உத்தரவு பிறப்பித்தார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-14,26)

## தொழில்நுட்ப கல்லூரியின் வைரவிழா மார்ச் 27 இல்!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியின் வைரவிழா நிகழ்வுகள், எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறவுள்ளன. இதன்போது வைரவிழா மலர் வெளியீடும் அதனைத் தொடர்ந்து இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

## வரியிறுப்பாளருக்கு நடமாடும் சேவை!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.மாநகரசபையால் எதிர்வரும் 29 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை கொட்டடி சீனிவாசகம் வீதியிலுள்ள சனசமூக நிலையத்தில் நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது என யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். வரியிறுப்பாளர்களின் நன்மைகருதி இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இதில் முதலாம், 18 ஆம், 19 ஆம் பழைய வட்டாரங்களுக்கான இந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு வரி அறிவித்தல், பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம், துவிச்சக்கரவண்டி உரிமம் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளன.

பொதுமக்கள் இதுவரைகாலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர் வரி ஆகியவற்றை பெற்று யாழ்.மாநகரசபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

## கிளிநொச்சியில் 10,000 க்கும் அதிகமாக தொழில்தேடுநர்கள்

### கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 24

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் தேடுநர்கள் உள்ளனர். அவர்கள் அரச வேலைவாய்ப்பு என்ற சிந்தனை மனநிலை மாறி ஏனைய துறைகளிலும் இணைந்து பணியாற்றத் தயார் நிலையில் உள்ளனர் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற தொழிற்சந்தை நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதார நெருக்கடி சுமையிலிருந்து எங்களை நாங்களே சுயமாக நிறுத்திக் கொள்ள வேண்டிய தேவைப்பாடு எமக்கு இருக்கிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடாது உள்ளூரிலேயே எம்மை நிலைநிறுத்திக் கொள்ளவழியேற்படுத்தவேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழில் தேடுநர்கள் காணப்படுகின்றனர். அவர்களில் 200 பேருக்கு மேற்பட்டவர்களுக்கு விழிப்புணர்வு அல்லது திருப்புமுனையாக இந்தத் தொழிற்சந்தை அமையும் - என்றார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுல் காந்திக்கு 2 ஆண்டுகள் சிறை

புதுடில்லி, மார்ச் 24

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பெயரை அவ தூறாகப் பேசிய வழக்கில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள் ளது.

குஜராத் மாநிலம் சூரத் மாவட்ட நீதிமன்றம் நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி குறித்து அவதூறாகப் பேசினார் என்ற குற்றச்சாட்டில் ராகுல் காந்திக்கு எதிராக பா. ஜ.க கட்சி சார்பில் நீதிமன்றில் அவதூறு வழக்குத் தொடரப் பட்டது.

இந்த வழக்கின் விசாரணை 4 ஆண்டுகளாக நடைபெற்று வந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை ராகுல் காந்திக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்று தீர்ப்பிட்டுள்ளது.

அத்துடன் இந்தத் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்வதற்கு ஏதுவாக ராகுலுக்கு 30 நாள்கள் பிணையும் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# இந்து நாகரிகத்துறையின் வினாடிவினா போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையின், இந்துப் பண்பாட்டுக் கழகத்தினர் உதயன் ஊடகக் குழுமத்தினருடன் இணைந்து, வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வினாடிவினா சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளனர்.

இதில் முதற்கட்டமாக கிளிநொச்சிப் பாடசாலை மாணவர்களுக்கான வினாடிவினாப் போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன. அடுத்தடுத்த மாகாணங்களில் எதிர்வரும் தினங்களில் வினாடிவினாப் போட்டிகள் நடைபெறவுள்ளன என்றும் அது தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (அ-ம)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அந்த முடிவால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். பாதிப்பு எதுவும் இருக்காது.

**இடபம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் மூலம் ஆதாயம்கிடைக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும். உடல்ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** எதிலும் பொறுமையுடனும் சிந்தித்தும் செயற்படவேண்டிய நாள். முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்த்துவிடுவது அவசியம். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளில் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்து ஈடுபடவும். பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களால் குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** தேவையான பணம் இருப்பதால் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனக்கசப்புகள் நீங்கும். சுபச் செலவு ஏற்படும்.

**துலாம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்:** மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். மனஉறுதியுடன் செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சங்கடங்கள் ஏற்படும். பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கையிருப்பு குறையும். முக்கியமானமுடிவுஎதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்கவும். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உண்டு. எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலயத்தில் செயற்பட்டு மகிழ்வோம் திறனாய்வு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சூரியகுமார் சசீதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் ஆசிரிய வாண்மை விருத்தி நிலையத்தின் முகாமையாளர் திருமதி விஜயகுமாரி முருகேசபிள்ளை கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வட்டு தெற்கு ஜே/165 கிராமஅலுவலர் சிவபாலன் சிவகுமார், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி தனலக்சுமி செல்வரத்தினம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)


# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 10 . 1948 — மறைவு 23 . 03 . 2023



**திரு.காசிநாதர் சோமநாதர்**

**(ஓய்வுநிலை உத்தியோகத்தர் - கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனம்)**

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் மற்றும் ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி மற்றும் வெள்ளவத்தை மற்றும் வவுனியா தோணிக்கல் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் தற்போது யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.காசிநாதர் சோமநாதர் அவர்கள் நேற்று (23.03.2023) வியாழக்கிழமை மதியம் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு ஈஸ்வரி தம்பதியரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், அமரர் கௌரியம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர் - வட்டக்கச்சி), அமரர் பவானியம்மா (ஓய்வு பெற்ற உப அதிபர்), வீரசிங்கம் (அவுஸ்திரேலியா) (ஓய்வுநிலை அரச கணக்குகள் பணிப்பாளர்-திறைசேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி (இளைப் பாறிய காணி வெளிக்கள உத்தியோகத்தர், ஓவசியர்), அமரர் குழந்தைவேலு (இளைப்பாறிய அதிபர்) மற்றும் தில்லைநாயகி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், விநாயகமூர்த்தி, அமரர் நடராஜா, தவமலர் (பிரான்ஸ்), சிறிரங்கநாதன் (சுவீடன்) ஆகியோரின் மைத்துனரும், துஸ்யந்தி (லண்டன்), சாவித்திரி (இத்தாலி), சிவரூபன் (இத்தாலி), சிவகேசவன் (லண்டன்), சிவநேசன் (சூழலியல் நிபுணர்-யாழ்ப்பாணம்), கோபிகா (வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், செந்தில்நாதன் (லண்டன்), வாசுதேவன் (இத்தாலி), சுவர்ணலோஜினி (இத்தாலி), யசோதா (லண்டன்), நிலானி (யாழ்ப்பாணம்), ஜணாங்கணன் (மக்கள் வங்கி - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சானுஜன் (இத்தாலி), டர்மிகா (லண்டன்), சபிநயன் (லண்டன்), சாஜித்தியன் (இத்தாலி), சாம்பவி (லண்டன்), சஞ்செயன் (லண்டன்), தருணிகா (வவுனியா), ரித்திகா (இத்தாலி), கிருத்திகா (லண்டன்), லோதிகா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (யாழ்ப்பாணம் கந்தர்மடம் இல. 05, இந்து மகளிர் லேன் பலாலி றோட், கந்தர்மடம்.) இடம்பெற்று, மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 05, இந்து மகளிர் லேன்,
பலாலி றோட், கந்தர்மடம்
077 6679 391 - சிவநேசன் (மகன்)
077 918 9445 ஜணாங்கணன்(மருமகன்)

தகவல்: குடும்பத்தினர்



# மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 12 . 1999 — மறைவு 22 . 03 . 2023



**சிவசங்கரன் கிருஷ்ணா**

**(நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் பழைய மாணவன்)**

வவுனியா நெளுக்குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசங்கரன் கிருஷ்ணா அவர்கள் கடந்த (22.03.2023) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் சிவசங்கரன் மனோராணி(ஆசிரிய ஆலோசகர் வவுனியா வடக்கு கல்வி வலயம்) யின் அருந்தவப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா நட்ராசா மற்றும் பூமணியின் பாசமிகு பேரனும் வசந்தராசா, விஜிதா, காலஞ்சென்ற முருகதாஸ் செந்துஜா( நெளுக்குளம்) மற்றும் கனகசபாபதி (சசி), ராஜிகா ( லண்டன்) ஆகியோரின் பாசமிகு மருமகனும் சிவயோகன், பேரின்பநாயகி (சுவிஸ்), ஆனந்தன், நவராணி ( ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பெறாமகனும் யாழதன், விஷ்னுகன், சஜித், டயானி, கிஷானி, விந்துஷன், மெலோசன், கனிஷா ஆகியோரின் மைத்துனரும் திவேதன், சினேகன், அனித்தா, அர்ச்சனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.03.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியள்வில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நெளுக்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெளுக்குளம், வவுனியா.
077 362 2951

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## இதுவும் ஒரு பகல் கனவே!

சர்வதேச நாணய நிதியத்தின் முதல் கட்ட கடன் தொகை இலங்கைக்கு கிடைத்துவிட்டது. அது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றியும் இருந்தார். பல விடயங்களை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்தாலும்கூட, அப்பாடா இனி எல்லாப் பிரச்சினையும் முடிந்தது என்று பெருமூச்சு விடமுடியாது. இனித்தான் உண்மையான சவாலே இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டு இருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுவது உண்மைதான். சர்வதேச நாணய நிதியத்தின் கடனை வாங்கிவிட்டு சும்மா இருக்கமுடியாது, அடுத்த 10 ஆண்டுகளுக்குள் அதனைச் செலுத்தி முடிக்கவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தமையால் வேறு தரப்புக்களிடமிருந்தும் இலங்கைக்கு கடன்கள் கிடைக்கும். அவையும் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். இவற்றுக்கு மேலாக ஏற்கனவே வாங்கிய கடன்களும் திருப்பிச் செலுத்தப்படவேண்டும். ஆக மொத்தத்தில் அடுத்த 10 ஆண்டுகள் என்பது இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலமாக இருக்கப்போகின்றது.


கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய இயலுமையை இலங்கை வளர்த்துக்கொண்டுள்ளதா? என்ற கேள்விக்கு இல்லை என்ற பதிலை உடனேயே கூறிவிடலாம். பொருளாதாரரீதியான மேம்பாட்டுக்கான எந்தவொரு திட்டமிடலும் இல்லாமலேயே, இலங்கை இப்போதும் கடனை வாங்கிக் குவித்துக் கொண்டிருக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இந்தப் பொருளாதாரத்தைச் சீரழித்த ஊழல் மற்றும் இலஞ்சம் என்பன இப்போதும் தலைவிரித்தாடுகின்றன. சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி 'பெருச்சாளிகள்' இன்னமும் தங்கள் வயிறுகளை வளர்த்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் இலஞ்சம் மற்றும் ஊழலால் நாட்டை நாசமாக்கிய எந்தவொரு அரசியல்வாதியோ, அவர்களுக்குக் குடை பிடித்த அதிகாரிகளோ தண்டிக்கப்பட்டதாகவும் பதிவுகள் இல்லை. இம்முறை சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்கும்போது ஐ.நா. சாசனத்துக்கு அமைவான ஊழல் தடுப்புச்சட்டம் இலங்கையில் உருவாக்கப்படவேண்டும் என்ற 'கறாரான' நிபந்தனையை விதித்திருக்கின்றது. இது வரவேற்கத்தக்கது. இலங்கை, சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கியமையால் இந்த நிபந்தனையை நிறைவேற்றியாகவேண்டும். இலங்கையும் அதனை நிறைவேற்றத்தான் போகின்றது. ஆனால், அதனூடாக எதிர்காலத்தில் ஊழலில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள், இந்த நாட்டில் ஊழலே நடக்காது என்று எவராவது நம்புவார்களாக இருந்தால் அவர்களை விட முட்டாள்கள் இந்த உலகில் இல்லை.

இலங்கையின் அரசமைப்பில் பல சட்டங்கள் உள்ளன. அவற்றில் சில சட்டங்கள் உலகிலேயே மிகச் சிறந்த சட்டங்கள் என்று போற்றப்படும் அளவிலும் உள்ளன. குறிப்பாக இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் உலகில் மூன்றாவது சிறந்த தரத்திலான சட்டம் என்று பாராட்டுகின்றார்கள். ஆனால், அதன் நடைமுறை எப்படி இருக்கின்றது என்று அந்தச் சட்டத்தின் ஊடாக தகவலைப் பெற்றுக்கொள்ள முயலும் தகவல் அறியும் உரிமை ஆர்வலர்களைக் கேட்டால்தெரியும். சட்டம் என்னவோ சிறப்பாக இருந்தாலும் அதைச் செயற்படுத்தும் இலங்கையின் அரச நிறுவனங்கள் படுமோசமாகவேயுள்ளன.

அரசமைப்பில் சட்டம் எப்படி இருந்தாலும் பிரயோக வடிவத்தில்தான் அதன் வெற்றி தங்கியிருக்கின்றது. பிரயோக வடிவம் என்பது அதனை நடைமுறைப்படுத்துபவர்களின் கையில் உள்ளது. சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் மனச்சாட்சியுடன், அந்தச் சட்டத்தின் பலன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் செயற்பட்டால் மாத்திரமே அது வெற்றிபெறமுடியும். '13'ஆவது திருத்தத்தின் ஊடாக அரசமைப்பில் உள்ளடக்கப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்களையே 36 ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் ஆட்சியாளர்கள் உள்ள நாட்டில், ஊழலில் ஈடுபடுபவர்களே ஆட்சியாளர்களில் ஒரு பங்குதாரர்களாக இருக்கும் நிலையில், ஊழல் எதிர்ப்புச் சட்டம் வந்து எல்லாவற்றையும் மாற்றிவிடும் என்று பகல் கனவு காணாதீர்கள்.

**நாளொரு நல்வார்த்தை**

"ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்திக்க நீங்கள் நிறைய நேரம் எடுத்துக் கொண்டால், அதை இறுதி வரை உங்களால் செய்யமுடியாது" – புரூஸ் லீ



# சுயாட்சியை நிபந்தனையாக விதிக்கவேண்டும் ஐ.எம்.எப்.

## ஹரி ஆனந்தசங்கரி வலியுறுத்து



**கொழும்பு, மார்ச் 24**

**இலங்கைக்கு நிதியை வழங்குவதற்கு முன்னர் தமிழ் சிறுபான்மையினருக்கு கூடுதல் சுயாட்சி என்ற விடயத்தை சர்வதேச நாணய நிதியம் நிபந்தனையாக விதித்திருக்கவேண்டும் என்று கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார்.**

ஆயினும் அவரது கருத்துக்கள் கனேடிய கொள்கையை பிரதிபலிக்கின்றனவா என்பது தொடர்பில் கனேடிய வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி கருத்துக் கூற மறுத்துவிட்டார்.

எந்தவிதமான அளவீட்டின்படியும், இலங்கை தோல்வியுற்ற மற்றும் வங்குரோத்து நாடாகும். அத்துடன் நீண்டகால அரசியல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மையை உறுதிசெய்யும் அரசியல் மற்றும் பொருளாதாரத் தலைமை இல்லாத நாடு என்றும் ஹரி ஆனந்தசங்கரி கூறியுள்ளார். சர்வதேச நாணய நிதியம், இலங்கையில் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்களின் மொத்த மற்றும் கடுமையான மீறல்களில் கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் தமிழ்ப் பிராந்தியத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தவேண்டும் என்று ஹரி ஆனந்தசங்கரி கோரியுள்ளார். (எ-இ)

# கோயம்புத்தூர் வெடிப்புச் சம்பவம் சஹ்ரானால் ஈர்க்கப்பட்டு நடந்தது!

## இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

சென்னை, மார்ச் 24

தமிழகம் கோயம்புத்தூர் கார் வெடிப்புச் சம்பவம், இலங்கையின் உயிர்த்த ஞாயிறுக் குண்டுவெடிப்பால் ஈர்க்கப்பட்ட சம்பவம் என்று இந்திய தேசிய புலனாய்வுப் பிரிவான என்.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

கோயம்புத்தூர் வெடிப்புச் சம்பவத்துக்கு மூளையாகச் செயற்பட்டவர் என்று சந்தேகிக்கப்படும் ஜமீஷா முபின், தனது தற்கொலைத் தாக்குதலுக்கு முன்னர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் முக்கியதாரி சஹ்ரான் ஹாஷிம் செய்ததைப் போன்ற பிரியாவிடை காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார். முபின் தான் ஒரு ஷஹீத் என்ற தியாகியாக விரும்புவதாக கூறியிருந்தார். அதற்காக காணொலியை வெளியிட அவர் திட்டமிட்டார் என்று நம்பப்படுகிறது. எனினும், அது நடக்கவில்லை என்றும் என்.ஐ.ஏ. குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் கோவை சங்கமேஸ்வரர் கோவில் முன்பாக இடம்பெற்ற வெடிவிபத்தில் ஈடுபட்டவர்கள், இலங்கையில் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புக்கு மூளையாகச் செயற்பட்ட சஹ்ரான் ஹாசிம் என்பவரால் ஈர்க்கப்பட்டவர்கள் என்பதை என்.ஐ.ஏ. கண்டறிந்துள்ளது. (எ-இ)

**நாளை**

25.03.2023
சனிக்கிழமை
பங்குனி 11

சுபநேரம் : 03.15 - 04.45
ராகுகாலம் : 09.15 - 10.45

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# கருகம்பனை – கவுண
# அருள்மிகு நரசிங
# புனருத்தாரண பஞ்சகு
# மகா கும்பாபிஷேக விஞ்

வைரவப்பெருமான் மெய்யடியார்கள்

விராட்புருடனது இடைநாடியானதும், சைவத்தமிழ் மன்னனாம் வீர இராவணனால் செங்கோலோச்சப்பட்டதும் நாயன்மாராலும், திருமூலராலும் பாடல்பெற்றதும்
கலாச்சாரத்தின் தலையாகிய யாழ்ப்பாணத்தின்கண் சேது சங்கமத் தீர்த்தத்தை கொண்ட நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமான் உறையும் நகுலேஸ்வரத்தின்
வைரவப்பெருமானின் புனராவர்த்ன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேகம் நிகழும் சுருகிருத வருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் 24.03.2023 வெ
நடைபெற எம்பெருமான் நல்லருள் பாலித்துள்ளமையால் எம் பெருமான் மெய்யடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக நடைபெறும் புனித நிகழ்வுகளில் கலந்து

## அருளாசிகள்



**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
குருமுதல்வர்,
திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

அன்புள்ளவர்களுக்கு...

நரசிங்க வைரவப் பெருமானுக்கு இன்று நடைபெறும் கும்பாவிஷேகம் அனைவருக்கும் மகிழ்ச்சியினைத் தருகின்றது. நீண்ட காலமாக எழுந்தருளி அருள்புரியும் வைரவப் பெருமானிற்கு பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பாவிஷேகம் இன்று நடைபெறுவது ஆலயத்திற்கும் ஊர் மக்களிற்கும் சிறப்புக்களைத் தருவதாகும். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்ற வகையில் தோன்றும் ஆலய வழிபாடு மனதிற்கும் உடலிற்கும் அமைதியினைத் தருகின்றது. இவ்வகையில் இலங்கைத் திருநாட்டின் இவ் ஆலயங்கள் வேண்டிடுவார் வேண்டுவதையும் காத்தருளும் கடவுளாகிய வைரவப் பெருமானினை அனைவரும் தரிசனம் பண்ணி மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக..!

## வாழ்த்துச் செய்தி மடல்



**கலாநிதி இராஜ ராஜ சிறி கு.நகுலேஸ்வரக் குருக்கள்**
நகுலேஸ்வர ஆதீனம் கீரிமலை

இலங்கையில் சென்னியாக திகழும் வடபுல யாழ்ப்பாணம் - கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவப் பெருமானின் இவ்வருட மகா கும்பாபிஷேக வாழ்த்து செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறோம்.

பல்வேறு அசாதாரண கோலமுள்ள காலங்களில் கூட வைரவப் பெருமானின் அருட்கடாட்சம் பொங்கிப் பிரவாகித்து இருந்ததனை இக்கிராமம் மட்டுமல்ல உலகமே அறிந்த வியப்பில் ஆழ்த்தியிருந்தது. குலதெய்வமாய், காவல் தெய்வமாக எனப் பல வடிவங்களில் முன்னே தோன்றி எம்மக்களின் இடர் தீர்த்து முன்சென்ற கைட்கரியமும் நரசிங்க வைரவப் பெருமானின் அருளாட்டுக்கு சான்றுகளாக இருப்பது வெள்ளிடை மலை நேர்த்திக்கடன்களுக்கு என்று தனிச்சிறப்பு பொருந்திய வைரவப்பெருமானிடம் எக்காரியத்தை செய்ய விளையும் போதெல்லாம் நம்பிக்கையுடன் தரிசித்து சிந்தையில் இருத்தி முன்னெடுப்போமாயின் அக்கருமசித்திக்கு அளவில்லாது வெற்றிகிடைப்பது திண்ணமாக இருப்பதும் போற்றுதற்குரியது. குல தெய்வம் என்றில்லாது வேண்டுவோர்க்கும் அருள்பாலிக்கும் வைரவப்பெருமான் 24.03.2023 இல் மகா கும்பாபிஷேக பெருவிழா காண்பது மேலும் அருட்கடாட்சம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. இதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

## மாவை ஆதினப் பேரரசின் ஆசிச் செய்தி



**மகாராஜ சிறி து.சுஷ.இரத்தினசபாபதி குருக்கள்**
மாவை ஆதீனப் பேரரசு.

ஈழ மணி திரு நாட்டின் வடபால் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமையப் பெற்றதும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்ரீ கந்த சுவாமியார் கோயில் இயக்கர், நாகர் காலத்திற்கு முற்பட்ட வரலாற்றுகளுடன் எழுச்சி பெற்றுக் கொண்டுள்ளது.

மாவை கந்தன் ஆலயத்தை சுற்றி இரண்டு கிலோமிற்றர் சுற்றுக் கிராமங்களில் பல கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றுள் மாவை கந்தன் ஆலயத்திற்கு மேற்க்குத் திசையில் கருகம்பனை கவுணாவத்தை அந்திரானை எனும் பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி அடியார்களுக்கு வேண்டும் வரங்களை எல்லாம் வாரி வளங்கி கொண்டிருக்கின்ற நரசிங்க வைரவ பெருமானுக்கு புனருத்தாரண வேலைகள் நிறைவுற்று மகா கும்பாபிஷேக விழா நடைபெறுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். வைரவ பெருமானின் திருவருளாள் சகல ஜீவராசிகளும் எல்லா நலமும் பெற்று வாழ பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன்.

## அருளாசிகள்



**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை.

வலி வடக்கு பிரதேசத்தில் கருகம்பனை நரசிங்க வைரவர் ஆலயம் மிகவும் பிரசித்தமானது. இவ்வாலயம் புனருதாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தம் அடைகின்றேன். வைரவப் பெருமானின் திருவருளால் அடியார்கள் அனைவரும் சீரோடும், சிறப்போடும் வாழ எனது நல்லாசிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

அன்னியர் வருகைக்கு முன்ப பல ஆயிரம் சைவ ஆலயங்கள் இலங்கை முழவதும் சிறப்புற்று விளங்கின. என் செய்வோம். அன்னியர்கள் எமது பாரம்பரியமான ஆலயங்கள் பலவற்றை அழித்தார்கள். அவ்வேளையில் சைவமக்கள் சூழாயுதத்தை மரநிழலிலும், கிணற்றடியிலும் நாட்டி வழிபாடு செய்தனர். காவல் தெய்வமாகிய வைர வழிபாடு சுமார் 300 ஆண்டுகளுக்கு மேல் சைவ சமயத்தின் மேன்மையை காத்தது. ஈழத்தில் கிராமிய வழிபாட்டு மரபு நரசிங்க வைரவர் வழிபாடு தனித்துவமானது. தங்கள் தீராப் பணிகளை போக்குவதற்காக இரவு வேளைகளில் படையல் செய்து இத்தகைய ஆலயங்களில் முன்னோர் கூட்டுவழிபாடு செய்தனர். அப்பாரம்பரியம் மேன்மையானது. அவ் வகையில் இவ்வாலயம் மிகவும் தொன்மைவாய்ந்தது. இவ்வாலயத்தின் சிறப்பு என்றும் பேணிப்பாதுகாக்க வேண்டும். திருப்பணி வேலைகளில் ஈடுபட்ட அனைவருக்கும் நன்றி கூறி வாழ்த்தி குமபாபிஷேகம் சிறக்க பிரார்த்தித்து அமைகின்றேன்.

## ஆசிச்செய்தி



**முதன்மை குரு மணி அகில இலங்கை வீரசைவ குருமஹா**
சன்னிதானம்
சிவஸ்ரீ கிரிட உருத்திரபுரேஸ்வர குருக்கள் இரேணுகாச்சிரம்,
கீரிமலை.

பைரவ வழிபாடு சிவவழிபாடு போல் தொன்மையானது. சைவ மக்களிடம் மிகவும் அதிகளவில் கைக்கொள்ளப்பட்டது. மூல மலமாகிய ஆணவ மலத்தை ஒழித்து மோட்சம் கொடுக்க கூடியது. இவ் வழிபாடு யாழ்ப்பாணத்தின் நகுலேஸ்வரத்தில் எல்லைக் கிராமங்களாகிய கருகம்பனை கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், மாதகல், என பரவி கோவில் கட்டி வழிபட்டு வந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லந்தர் வருகையின் போது கோவில்கள் உடைக்கப்பட்ட போது, சைவத் தமிழர்கள் இல் வழிபாட்டை சூல உருவாக ஆற்றடி, காட்டுப்பகுதி, மயானம் போன்ற இடங்களில் உருவமைப்புச் செய்து வழிபட்டதாகவும் காதுவழிக் கதைகள் கூறும். சூலம் எம் பெருமானின் ஆயதமாகினும் சூலம் என்றால் பைரவரை குறிக்கும். கருகம்பனை அந்திரானை கவுணவத்தை அருள் மிகு நரசிங்க பைரவப் பெருமான் கோயிலும் தற்போது புனருத்தானம் செய்யப்பட்டு ஆகமசார் கோயிலாக மாற்றி 24.03.2023 மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இக் குடமுழுக்கு சிறக்க அடியார்களுக்கு இன்னருள் கிடைக்க ஆசிவழங்குகிறேன்.

## வாழ்த்துச் செய்தி



**கலாநிதி. (திருமதி) சுகந்தனி சிறீமுரளிதரன்,**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
இந்துக் கற்கைகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்.

கருகம்பனை – அந்திரானை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தில் மஹாகும்பாபிஷேகம் 24.03.2023 ஆம் திகதியன்று நடைபெற திருவருள்பாலித்துள்ளதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றோம்.

திருமூலரினால் 'சிவபூமி' என அழைக்கப்பெற்ற இலங்கைத் திருநாட்டின் சைவமும் தமிழும் சிறப்புற விளங்கும் யாழ்ப்பாண நன்நகரின் வடபால் புண்ணிய பூமியாகிய கருகம்பனையில் ஆல அரசமர சோலையின் நடுவிலே எழுந்தருளியிருக்கும் வைரவர் ஆலயத்தை சுற்றி பல ஆலயங்கள் அமைந் துள்ளன. குறிப்பாக, மிக அருகாமையில் தாய்த்தெய்வமாக நாச்சிமாரும், பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகிய கீரிமலை நகுலேஸ்வரப் பெருமானும் அருளாட்சி புரிகின்றார்கள். இவ்வாலயம் பலநூறு ஆண்டுகள் தொன்மையானது. இவ்வாயத்தில் நாகதம்பிரான் அமர்ந்துள்ள தலவிருட்சமாகிய மருதமரத்தின் முதுமை இதற்கு சிறந்த சான்றாதாரமாக அமைந்துள்ளது.' நரசிங்க வைரவரப் பெருமான கருகம்பனை வாழ் கிராம மக்களின் குலதெய்வமாக மட்டுமல்லாது அயல் கிராமத்தவர்களும் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் அற்புதப்பெருமானாகவும் காணப்படுகின்றார். வைரவப்பெருமானை வழிபாடாற்றியதன் பின் எக்காரியத்தை தொடங்கினாலும் தங்குதடையின்றி சிறப்பாக நடைபெறும் என்பது இவ்வூர் மக்களின் அசையாத நம்பிக்கையாகும். வைரப்பெருமானின் அடியார்கள் நேர்த்திவைத்து, மடைபரப்பி, வேள்வி செய்து, பொங்கல் பூசைகள் செய்து நிறைவான வாழ்வு வாழ்ந்து வருகின்றார்கள். இதுமட்டுமல்லாது அன்று தொட்டு இன்றுவரை வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுப்பிரார்த்தனை நடைபெறுவது சிறப்பம்சமாகும். இதனால் இவ்வூர் மக்களின் காவல் தெய்வமாக வைரப்பெருமான் விளங்குகின்றார்.

அல்லல் போக்கி எம்மையெல்லாம் வாழவைக்கும் குலதெய்வத்திற்கான திருப்பணி வேலைகள் ஆலய பக்தர்களினது நிதி மற்றும் ஆலோசனைகளினால் இன்று புதுப்பொழிவுடன் எம்பெருமான் காட்சி தருகின்றார். இத்திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் வைரவப்பெருமானின் திருவருள் நிறைவாக கிடைக்க வேண்டும் என்பதுடன், மஹாகும்பாபிஷேகம் மிகச்சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல வைரவப்பெருமானின் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

## வாழ்த்துச் செ



வலிகாமம் வடக்கு

சைவ ஆதாரப் புருசர்களால் தேவாரம், திருமந்திரம்,
பூமியாம் இலங்கைத் திருநாட்டின் முக்கிய நகரங்கள் வரிசை
பண்பாடு இப்படி பல்வேறுபட்ட சிறப்பம்சங்களோடு மு
செம்மண்ணின் செழுமையும் அழகும் வளமும் தன்னகத்
அந்திரானைப்பகுதியில் கோயில் கொண்டு எழுந்தருளி
நரசிங்க வைரவ பெருமானின் ஆலய மகா கும்பாபிசேகத்
செய்தி வழங்குவதிலும் பெரு உவகை அடைகின்றேன்.

"நரசிங்க வைரவருக்கு ஆற்றும் பணியால் நம்
வகையில் தற்போது பக்தர்களின் பெருமுயற்சியாலும்
பேரனுக்ரகத்தாலும் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பு
டன் கற்றளியுடன் கூடிய அழகுடன் இவ்வாலயம் எழுந்து
இலங்கையிலே மாபெரும் வேள்வி நடைபெறும் ஒரு முக்
நரசிங்க வைரவர் ஆலயத்தின் மகிமை அறியாதோர் யா
வேள்வி என்றால் அது கவுணாவத்தை நரசிங்க வைரவர்
நிகழ்வு சிறப்புற அமைய சிறப்புற அமைய எல்லாம் வல்ல
பணிவோமாக.

## வாழ்த்துச் செ



வ

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கருகம்
பதியினிலே வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்
24.03.2023 நடைபெறுகின்ற புராவர்த்தன பஞ்சகுண்
விழாவை முன்னிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு

மக்களிடையே ஒருங்கிணைந்த தெய்வஉணர்வை
களோடு மாண்புற வாழவைப்பதற்கு வழிகாட்டி நிற்
கோவில்களில் நடைபெறும் கொவில்களில் நடைபெறு
தெய்வசாந்நித்தியத்தை மென்மேலும் மெருகுறச் செய்வது
மியங்களைக் கடைக் கொள்வதற்கும் வழிவகுக்கின்றன.
வளர்ச்சியையே வெளிக்காட்டி நிற்கின்றது. அவ்வாலயத்தை
பாங்கும் நன்னெறிப்போக்கில் விருத்தி பெறுவதென்பது கா
கருத்தியலாகும். அவ்வகையிலேயே, புனருத்தாரண
உறைந்து, காவற்தெய்வமாக ஊரை இரட்சித்துக் கொண்
நடைபெறுகின்ற மஹாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாகவும் ப
உயரிய நன்னெறிப்பாங்கில் நல்வாழ்வை வாழ்வதற்த
நரசிங்கவைரவப்பெருமானின் பாதம் பணிந்து, எனது வாழ்த்

## வாழ்த்துச் செ



வலிகாமம் வடக்கின் கருகம்பனை பதியில் கோயி
வைரவருக்கு மகாகும்பாபிசேகம் : வரலாற்று புகழ் பூத்த ஆல
ஆலயம். கருகம்பனை மக்களும் அயற்கிராம மக்களும் அ
வாழ்வை கொண்டு செல்ல அருள்புரியும் நரசிங்க வைரவ
வேள்வி செய்து பொங்கி படையல் இட்டு மண்வாசனையும்
கொண்டிருக்கும் இவ் ஆலயத்திற்கு புனராவர்த்தன பஞ்ச
நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியது. வைரவப்பெருமானை போ
தவர்களுக்கு கிடைக்க எம்பெருமான் அருள்வேண்டி இறை
ஆலய தர்மகர்த்தா மற்றும் புனருத்தாரண சபையினரை வா

## மகா கும்பாபிஷேகம்


| | | | | |
|---|---|---|---|---|
| Sairam Hard ware & constrution<br>கருகம்பனை சந்தி.<br>T.P : 077 727 9205 | பிரகலாந் & அருண் பல்பொருள் வாணிபம்<br>உரிமையாளர் : வை.சருஸ்னன்<br>நகுலேஸ்வாரா வீதி, கீரிமலை.<br>T.P : 077 395 7583 | நாச்சிமார் கட்டிடப்பொருள் விற்பனை நிலையம்<br>மெய்கண்டான் வீதி, இளவாலை.<br>T.P : 077 621 7464 | அம்பாள் கிறேசர் & நரசிங்க சைவரவர் ரான்ஸ்போர்ட்<br>நகுலேஸ்வரா வீதி<br>T.P : 077 495 4903 | அம்பிகை திருமண சேவை<br>உரிமையாளர் : உ.லலிதாம்பிகை<br>வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.<br>T.P : 077 447 5071 |
| N.K Work & சவீனன் சவுன்ஸ்<br>சித்திரமேழி, இளவாலை.<br>T.P : 077 353 4626 | துர்க்கா அரைக்கும் ஆலை<br>கருகம்பனை சந்தி.<br>T.P : 077 614 0907 | துசாகன் ரான்ஸ்போர்ட்<br>கல்லுப்புடுங்கி, கொல்லங்கலட்டி.<br>T.P : 077 431 5350 | சந்நிதியான் பிறிண்டேர்ஸ்<br>உரிமையாளர் : க. ரவீந்தன்<br>மல்லாகம்<br>T.P : 077 859 9047 | ஓவியா பல்பொருள் வாணிபம்<br>மயிலங்கூடல், இளவாலை.<br>T.P : 077 606 6053 |
| ஓம் மல்ரி சென்ரர் & டிசைன்ஸ்<br>மகாஜனக்கல்லூரி முன்பாக, தெல்லிப்பளை.<br>T.P : 076 708 4466 | கஜமுகன் ஹட்வேயார்<br>147,149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்..<br>T.P : 021 222 2833 | ALDI Electronics<br>68, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்<br>T.P : 077 360 4500 | விநாயகர் விவசாயக் களஞ்சியம்<br>அம்பனைச் சந்தி, தெல்லிப்பழை.<br>T.P : 077 945 5946 | சத்தியா மல்ரி சென்ரர்<br>உரிமையாளர் : S.சத்தியசீலன்<br>நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை<br>T.P : 077 716 9055 |


அப்பையா கலையகத்தினரால் வைரவப்பெருமானுக்கான இறுவட்டு வெளியீடு இடம்பெற உள்ளது அனை
எமது மஹா கும்பாபிஷேக விழாவினை ... காட்சியில் நேரடி ஒளிப்பரப்பினை பார்த்து எம்பெரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ாவத்தை – அந்திரானை
# ங்க வைரவர் ஆலய
# குண்டபக்ஷ அட்டபந்தன
# ஞாபன சிறப்பிதழ் 24.03.2023

ம் பஞ்ச ஈஸ்வரங்களை தன்னகத்தே கொண்டதும் முத்து நவரத்தினங்களால் விளங்கி இலங்கை எனப்பட்டது ஆகிய இந்நாட்டின் வடபால் சைவத்தமிழ் ன் தென் மேற்பால் கருகம்பனை கவுணாவத்தை அந்திரானையில் கோயில் கொண்டு எழுந்தருளி தம்மடியார் பிறவிப்பிணி போக்கி அருளும் அருள்மிகு நரசிங்க வெள்ளிக்கிழமை காலை 9.19 மணி முதல் 10.41 மணி வரையுள்ள இடப லக்கினமும் அச்சுவினி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் குடமுழுக்கு கொண்டு வைரவப்பெருமானின் இன்னருளுக்கு பாத்திரமாகும் வண்ணம் வேண்டுகின்றோம்.

## செய்தி

**சோமசுந்தரம் சுகிர்தன்,**
தவிசாளர்,
க்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

, திருப்புகழ்களால் வியந்து பாடப்பெற்ற சிவ சயில் கலை, கலாசாரம், வரலாறு, இலக்கியம், முன்னிற்கின்ற யாழ்ப்பாண மாவட்டத்தில் த்தே கொண்ட கருகம்பனை கவுணாவத்தை யிருக்கும் காக்கும் மூர்த்தியாய் விளங்கும் தை இட்டு நான் அக மகிழ்வதோடு, வாழ்த்துச்

ம் பரம்பரைக்கும் அண்டாது பிணி. அந்த நரசிங்க வைரவ நாதனின் அருளாலும் புனருத்தாபனம் நிறைவடைந்து புதுப்பொலிவு துள்ளதை இட்டு பெருமிதம் கொள்கின்றேன். க்கிய சிறப்பு வாய்ந்த ஸ்தலமாக விளங்கும் பாராக இருக்க முடியும்.. யாழ் குடா நாட்டில் ர ஆலயமே தான். இவ் ஆலய கும்பாபிசேக அருள் மிகு நரசிங்க வைரவ பெருமான் பாதம்

## செய்தி

**சண்முகராஜா சிவஸ்ரீ**
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை.

ம்பனை - கவுணாவத்தை - அந்திரானைப் க்கும் நரசிங்க வைரவர் ஆலயத்திலே டபட்ச மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி கமகிழ்வடைகின்றேன்.

வப் பதியவைத்து, மக்களை மானிடப்பண்பு பவை கோயில்களே ஆகும். இத்தகைய மும் கும்பாபிஷேகம் முதலிய கிரியைகள் துடன் மட்டுமன்றி, மக்களை நல்லுயர் விழு . அவ்வாலயம் அமைவு பெற்றுள்ள ஊரின் தைச் சார்ந்தவர்களின் உளப்பாங்கும் செயற் காலத்தின் கட்டாயமான - தவிர்க்கவியலாத னம் செய்யப்பெற்று, அழகிய கோவிலில் ண்டிருக்கும் நரசிங்கவைரவப் பெருமானுக்கு பக்திபூர்வமாகவும் நிகழ்வுற்று, அனைவரும் அருள்புரியவேண்டும் என எல்லாம் வல்ல ழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## செய்தி

**சு.சுதர்ஜன்,**
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை

யில் கொண்டுறையும் அருள்மிகு நரசிங்க ஆலயம் மரங்கள் சோலை கொள் அழகு நிறை அன்றாடம் வழிபாடு செய்து அறநெறியில் தம் ரவர் குடிகொண்ட ஆலயம். பழமை மாறாது யும் கிராமிய வழிபாடும் இன்றும் தொடர்ந்து ச குண்டபக்ஷ பிரதிஸ்ட மகா கும்பாபிஷேக போற்றி வழிபட்டு எல்லா நலன்களும் உலகத்-நிறைஞ்சி பணிந்து அரிய திருப்பணி செய்யும் வாழத்தி அமைகின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**சி. புஸ்பராசா**
ஆலய தர்மகர்த்தா

மறப்பேனோ நரசிங்கனை.....

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு"

என்ற திருவள்ளுவருடைய குறள் வழி நாம் மனதினை நிலைநிறுத்தி எல்லம் வல்ல கருகம்பனை கவுணாவத்தை அந்திரானை நரசிங்க வைரவர் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேக நிகழ்விற்கு ஆசி கூறக்கிடைத்த சந்தர்ப்பத்திற்கு முதலில் நன்றி கூறி மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

நரசிங்க வைரவனுக்கு ஆற்றும் பணி நம் பரம்பரைக்கும் அண்டாது பிணி என்ற வேத மந்திரம் அனைவரது உள்ளங்களிலும் நிலைத்துக் கொள்ள வேண்டுவதுடன் நம்பினோர் இறைவனால் கைவிடப்படார் என்றது போல நரசிங்கனை நோக்கிச் செய்த அனைத்து தர்மங்களும் இப்பிறப்பில் மட்டுமன்றி மறு பிறவிக்கும் துணையாக வந்து அருள் புரியும்.

"தேடிக் கொண்டேன் என்னுள்ளே நேர்தரு நந்தியை
ஊடுபுக்காரும் உணர்ந்தறி வாரில்லை
ஊடுபுக் தேறலுற்றேனவன் ஓலங்கள்
மூடிக் கண்டேனே"

என்ற திருமூலரின் மந்திரம் இறைவனுடைய பார்வையினால் எல்லாம் எம்வசமாய் விடும் என்பதை உணர்த்திக் கொள்கின்றது. வரலாற்றுப் புகழ் பெற்ற இவ் தலமானது புனர்நிர்மானப் பணிகள் இனிதே நிறைவடைந்து அனைத்து அடியவர்களின் வாழ்விலும் அவன் அருள் கிட்ட வேண்டும் எனக் கூறி ஆசி நல்குகின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**த.தயானந்தன்**
அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வரம் ம.வி

கவுணாவத்தை அருள்மிகு நரசிங்க வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கும் திருவருள் கைகூடியமைய எண்ணி அகமகிழ்கின்றேன்.

கருகம்பனை கவுணாவத்தை அந்திரானை கிராமத்தில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் நரசிங்க வைரவப் பெருமான் ஆலய சரித்திரத்தில் ஒரு பொன்னான நன்னாள். மூலமூர்த்தியாகிய வைரவப் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறக் கிடைத்த நன்னாள். இவ்வூர் அன்பர்களின் பெரு முயற்சியினாலும் ஆலய நிர்வாகத்தினராலும் முன்னெடுக்கப்படுகின்ற இக்கும்பாபிஷேகப் பணிகள் சிறப்புற நடை பெற்று திருவருள் என்றும் பெருக எல்லாம் வல்ல வைரவ பெருமானின் திருவடிகளை இறஞ்சி வாழ்த்துகின்றேன்.

வைரவப் பெருமாள் பக்தர்களை இரட்சிக்கும் காவற் தெய்வம் அகந்தையைக் கிள்ளி எறிந்து விட்டு அருள் கொடுப்பவர் இதனையே "பரமனை மதித்திடா பங்கையாசனன்" என கந்த புராணம் அழகாக கூறுகின்றது. இவ் வைரவர் வழிபாடு என்பது சைவ சமய வழிபாடுகளுள் ஒன்றாகும். சைவ சமயத்தில் தோன்றிய 64 மூர்த்தங்களில் வைரவ மூர்த்தம் 38வது மூர்த்தமாக போற்றப்படுகின்றது.

"விரிந்த பல் கதிர்கொள் சூலம்
வெடி படு தமருகம் கை
தரித்த தோல்"

என்ற அப்பர் சுவாமிகளின் அருள் வாக்கிற்கு அமைய இப்பதியில் எழுந்தருளி அருள்பாலித்து வரும் எம்பெருமானுக்கு அட்ட புஷ்பங்களால் அர்ச்சனை செய்து எட்டு வித ஆராத்திகளும் நிகழ்த்தி அவன் தாள் வணங்கி பேரின்பம் பெறுவோமாக. எனவே இவ்வூர் அன்பர்கள் மற்றும் சைவ அன்பர்கள் அனைவரும் இம் மஹா கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கண்ணிலால் அவர் தம் நல்விழாப் பொலிவு கண்டு இன்ப சுகம் பெற வேண்டும் என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**சிவபதி த.செல்வக்குமரன் ஐயா**
ஆலய நித்திய அர்ச்சகர்
கீரிமலை தீர்த்தக்கரை சித்தி விநாயகர் தேவஸ்தான நித்திய
அர்ச்சகரும் ஆதீன கருத்தாவும்.

இவ் இலங்காபுரியில் புகழும், அருளும் பின்னிப் பிணைந்த கவுணாவத்தை அந்திரானை புண்ணிய தேசத்தில் அடியார்கள் வேண்டுவன ஈய்ந்தருளும் கிராமக் காவல் தெய்வமாம் நரசிங்க வைரவருக்கு அடியோன் செய்த நல்வினையின்பால் பதினோரு வருடங்களாக இடைவிடாத நித்திய பூசைகளை செய்து வருகின்றேன் என்பதை நினைத்தால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கி வைரவப் பெருமான் அருளன்றி வேறு எதுவும் இல்லை. கடந்த மகா கும்பாபிஷேகத்தில் அடியேன் பற்றியிருந்தேன். இம்முறை நடைபெறும் இக் கும்பாபிசேகத்திலும் அடியேன் பங்கேற்றுள்ளேன் என்பதை நினைத்து அடியேன் பெருமிதம் கொள்கிறேன். இம்முறை நடைபெறும் மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து வரும் மண்டலபிஷேகம் என்ப சிறப்புடன் நடைபெற வைரவப் பெருமானின் திருவருள் துணை கொண்டு அடியேனுக்கு நல்லாசியும் கிடைக்க வேண்டும் என்றும் ஆலயத்தை நிர்வாகித்துக் கொண்டு இருக்கும் ஆலய தர்மகர்த்தாவிற்கும் அடியார்களுக்கும் ஆலய திருப்பணிக்கு நிதி, பொருள், சரிதா உதவி வழங்கிய அனைத்து அடியவர்களுக்கும் எம்பெருமானின் நல்லருள் கிடைக்க வேண்டும் என்று அடியேனின் ஆசிரியையை கூறிக்கொண்டு இத்துடன் அடியேனின் ஆசிரியை நிறைவு செய்து கொள்கி-ன்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**சி.கந்தசாமி**
உப தலைவர்
கருகம்பனை கவுணாவத்தை
நரசிங்க வைரவர் ஆலய புனருத்தாபன சபை

வழித்துணையாவான் நரசிங்கன்....

"சூரியன் தோன்றுவதும் சுடரொளி பரவுதலும்
விடியலுக்கு அர்த்தமென்று எண்ணி விடல் கூடாது
இறையுணர்வு தோன்றுவதும் இதய சுத்தி பரவுவதும்
விடிவென்ற அர்த்தத்தின் அடிப்படை"

என்ற ஆசுகவி செ.சிவசுப்பிரமணியம் அவர்களின் சிந்தனையை தன்தாக்கி கருகம்பனைப் பதியிலே ஆண்டாண்டு காலம் ஆண்டருள் புரியும் அந்திரானை நரசிங்க வைரவ ஆலய புனர்நிரமான செயற்பாடுகள் சிறக்க நல்லாசி வழங்குவதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற ஆழமான வைர வரிகளை மனதிலே நிலை நிறுத்திக் கொண்டு வைரவர் தெய்வம் காவல் தெய்வம் என்பதுடன் நம்பியவர் வாழ்வில் ஒளியேற்று பவன் என்பதும் பொருள். சடங்கு நிலை கடந்த வனாய் ஆகம விதிக்குட்பட்டவனாய் விளங்கும் வைரவ வழிபாடு இன்று சைவ மக்கள் மத்தியில் ஓங்கி வளர்ந்து விட்டது ஈழத்தில் பிரசித்தி பெற்ற வைரவர் ஆலயத்தில் அந்திரானை நரசிங்க வைரவர் ஆலயமும் ஒன்று. இவ் ஆலயத்திற்கென்று தனிச் சிறப்பும் தனி இடமும் உண்டு. அடியவர்களின் நம்பிக்கையின் சின்னமாய் சிகரமாய் நித்திய ஒளி வீசுபவனாய் உள்ளார். எம் பெருமானை நம்பி ஆரம்பித்த இப் பணியானது வெகு விரைவில் பூரணத்துவம் அடைந்துள்ளது. எல்லோர் வாழ்விலும் ஒளி பிறக்கவும் நன்மைகள் விளைய வேண்டும் என்று கூறி நல்லாசி வழங்குகின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**ச. ஜெயதாசன்**
பொருளாளர்
புனருத்தாபன சபை,கருகம்பனை, கவுணாவத்தை நரசிங்க வைரவர்.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடக்கில், கருகம்பனை ஊரில் கவுணாவத்தையில அந்திரானப்பதியில், மாட்சிமை பொருந்திய மருதமரத்தின் அருகில், ஆலமரக் கூடலில் அமர்ந்து எமக்கு அருள்புரியவென்றே வன்னியுடையாரோடும் வந்து அமர்ந்திருக்கின்ற வைரவப் பெருமானின் 2023 ஆம் ஆண்டு புனருத்தாரண கும்பாபிஷேகம் மார்ச் மாதம் 23.24.25 ஆம் திகதிகளில் பங்குனி மாத அஸ்வினி நட்சத்திரத்தில் நிகழ உள்ள இச்சந்தர்ப்பத்தில், புனருத்தாரண வேலைகள் திட்டமிட்டபடி நிறைவேறவும் கும்பாபிஷேகம் சிறப்புற நிகழவும் அவனருளாலே அவன்தாள் வணங்கி, தொடங்கும் காரியங்கள் எல்லாம் தொல்லையின்றி நிறைவேற விநாயகப் பெருமானை வேண்டுவதுடன் வைரவப் பெருமான், காளியம்பாள், நாகதம்பிரான் ஆகிய கடவுளரதும் அருளையும் ஆசியையும் வேண்டிப் பிரார்த்திப்பதுடன் எல்லாம் நல்லபடி சுமுகமாக கடன், 'கவலை ஏதுமின்றி நிம்மதியாக நிறைவுபெற மீண்டும் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வளவு குறுகிய காலத்தில் (5 மாதகாலம்) இப்பெரிய திருப்பணி முற்றுப்பெறச் செய்வதில் புனருரத்தாரண சபைப் பொறுப்பாளர் ஆகிய என்னுடன் சகல விதத்திலும்ட ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றி கூறுவதுடன் அவர்களுக்காகவும் வைரவப் பெருமானின் அருள் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.



## வாழ்த்துச் செய்தி

**த.திருநாவுக்கரசு**
தலைவர்
கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம்
புனருத்தாபன சபை உறுப்பினரும் கட்டிட மேற்பார்வையாளரும்

தொன்று தொட்டு குலதெய்வ வழிபாடுகள் கிராமம் தோறம் பேணப்பட்டு வந்துள்ளன. அவை பல்கிப்பெருகி பல்வேறு நிலைகளில் மேன்மை பெற்று மகாகும்பாபிஷேகம் நிகழும் அளவிற்கு சிறப் புற்று நிலைமையானது கவுணாவத்தை நரசிங்க வைரவப் பெருமானின் கும்பாபிஷேக வாழ்த்துச் செய்தி வழங்கும் வரையிலதளன செயற்பாட்டிற்கு தலை வணங்குகின்றோம்.

சிறு சிறு குடும்பங்கள் பொங்கல் பொங்கி, மடை பரப்பி, வேள்வியிட்டு நேர்த்திக்கடன்களை நிறை வேற்றுகின்ற மரபு இன்றும் அருகி விடவில்லை என்பதற்று இங்கேயே சான்றுகள் கிடைத்துவரும் அளவிற்கு மகா கும்பாபிஷேக பெருவிழாவிற்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவையடைகின்றோம். மரபு வழ்தெய்வ வழிபாடு இன்றும் நீடித்து நிலைத்திருப்பது ஆன்மீக ரீதியாக ஆசுவாசப்படுத்துவது மேற்படி சிகழ்வு நிலைகளிலிருந்து கண்கூடாக நாம் அனுபவித்து பேருவகை அடைவதனை காணமுடிகிறது.

ஊரவர்களின் அயராதமுயற்சியால் "சிறு துளி பெரு வெள்ளம்" திருப்பணி வேலைகள் நிறை வெய்தி மகா கும்பாபிஷேகம் காண்பது ஊரிற்கு தனிச்சிறப்பு என்று வாழ்த்தி நரசிங்க வைரவப் பெருமானின் பாதங்களில் சரணாகதி அடைகின்றோம்.

## சிறக்க அனுசரணை


**Green Super market**
மல்லாகம் சந்தி
T.P : 077 7 79 0390

**ஐங்கரன் Cool Bar**
கே.கே.எஸ் சந்தி.
T.P : 077 935 2707

**அம்மன் சிற்பக்கலை கூடம்**
ஐயனார் கோவிலடி, புலியந்தோட்டம், சுன்னாகம்.
T.P : 077 945 2034

**ABI Cakes**
கருகம்பனை
T.P : 077 577 4800

**சிவன் அரைக்கும் ஆலை**
நகுலேஸ்வரா வீதி, இளவாலை.
T.P : 076 301 9990

**நீதன் றில்லிங்**
மயிலங்கூடல், இளவாலை.
T.P : 077 749 4840

**சாரங்கன் உணவகம்**
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
T.P : 076 546 0149

**நியூ மற்ஸ் அக்கடமி.**
இளவாலை வைத்தியசாலை அருகாமை.
T.P : 077 368 1149

**S.V.S நரசிங்க வைரவர் ரான்ஸ்போர்ட்**
செந்தாவத்தை கொல்லங்கலட்டி.
T.P : 077 518 9859

**தீனா ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர் : ஆ.திருநாவுக்கரசு
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.
T.P : 077 431 6400

**சிற்றி ஹாட்வெயார் அன்ஸ்ரோர்ஸ்**
இல.55.57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5003

**நியூ லக்ஸ்மி ரேடர்ஸ்**
இல.275, கண்டி வீதி, சாவகச்சேரி.
T.P :077 324 1755

**சபரீசன் மல்ரி சென்ரர்**
நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை கீரிமலை
T.P : 076 567 9645



வரும் சிறப்பு பிரதிகளை பெற்றுக்கொள்ள
ருமானின் அருளைப் பெற்றுய்யவும்.

**ஆலய தர்மகர்த்தாவும்
புனருத்தாரணசபையினரும்**

(CS 2409)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
# மணிவிழா வாழ்த்தும் சேவை நயப்பும்



யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அதிபராக கடமையாற்றி
20.03.2023 திங்கட்கிழமை அன்று ஓய்வுபெற்ற

## கலாநிதி சி.க.எழில்வேந்தன் (SLEAS III)

### சேவை விபரம்

1. 05.08.1985 – 30.12.1990 – ப/ஊவா கட்டவளை தமிழ் வித்தியாலயம்
2. 05.01.1991 – 20.11.1996 – யோகபுரம் மகா வித்தியாலயம் துனுக்காய்
3. 20.11.1996 – 21.10.2001 – நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி
4. 21.11.2001 – 10.03.2010 – மாத்தளை இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை)
5. 10.03.2010–20.10.2010 – யா/யாழ்ப்பாணம்இந்துக்கல்லூரி (தேசிய பாடசாலை)
6. 21.10.2010 –20.03.2023 வரை – யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)

### அருளாசிச் செய்தி



**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.**
குருமுதல்வர்.
திருஞானசம்பந்தர் ஆதீனம். நல்லூர்.

அன்புள்ளவர்களுக்கு...

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றி இன்று ஓய்வு நிலையை அடையும் சி.க.எழில்வேந்தன் அவர்களை வாழ்த்துவதில் மனமகிழ்ச்சி அடைகின்றோம். பல பல்கலைக்கழகங்களில் பட்டங்களைப் பெற்று பல கல்லூரி களில் ஆசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றி கல்விக்கும் ஏனைய சமயச் செயற்பாட்டுக்கும் விளையாட்டுக்கும் அனைவரோடும் அன்பாகப் பழகி எடுத்த விடயங்களை அழகாகச் செய்து அனைவரையும் மகிழ்விப்பர். மனைவிக்கு நல்ல கணவனாகவும் பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாகவும் அயலவர்களுக்கு நல்ல நண்பனாகவும் காணப் படுகின்றார். மாணவர்களுடன் நன்றாகப் பழகுவதோடு அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். இவரின் மணிவிழாவைச் சிறப்புச் செய்து விழாக்காணும் நல் உள்ளங்களை வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

### ஆசிச் செய்தி



**J.J.Gnanaruban,**
Superintendent
Minister,
Methodist Church, Jaffna Circuit.

யாழ மத்திய கல்லூரி. யாழ்.நகரில் அமைநதுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கல்லூரியாகும். இக் கல்லூரியின் மூலம் கல்விமான்களும். உயர் நிலையி லுள்ளோர்களும் காலத்துக்குக் காலம் தற்காலம் வரை உருவாக்கப்பட்டுக் கொண் டேயிருக்கிறார்கள். இது இக்கல்லூரியின் மாண்பையும். பெருமையையும் எடுத்தியம் புகின்றது. அந்த வகையில் இப்பெருமைமிகு கல்லூரியில் ஒரு தசாப்தத்திற்கு மேலாகச் சிறப்பான பணியாற்றி ஓய்வு நிலை பெறும் இக்கல்லூரியின் அதிபர் கலாநிதி சி.க.எழில்வேந்தன் அவர்களை வாழத்துகிறேன். அவருடைய மணிவிழா நூலில் ஒரு வாழ்த்துரையை எழுதி அவரை வாழ்த்துவதற்கு கொடுத்த வாய்ப்புக்காக நன்றி கூறி அவருடைய எதிர்கால வாழ்வும். பணியும் சிறப்புற அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

God bless you!

### மணிவிழா நாயகனை வாழ்த்துகிறேன்



**கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
கடற்றொழில் அமைச்சர்
பழைய மாணவன்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அதிபராக. பன்னிரண்டு ஆண்டுகள் கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் ஓய்வுபெறும் கலாநிதி சின்னப்பிள்ளை கனகசபை எழில்வேந்தன் அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இருநூறு வருடம் தாண்டிய பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவனாகிய நான். இந்த நாட்டிலே வாழும் அனைத்து மாணவர்களையும் ஒரு சேர நேசிப்பவன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதே என்னுடைய சித்தாந்த மாக இருக்கின்றது. தான் ஆடாவிட்டாலும் தன் தசையாடும் என்று சொல்வது போல நான் கல்வி கற்ற பாடசாலை. என்னுடைய தாயார் கல்வி கற்பித்த பாடசாலை. எனது சகோதரங்கள். உறவுகள். நண்பர்கள் கற்ற பாடசாலை எனும் அடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மீது என்னுடைய விருப்பும் அக்கறையும் எப்போதும் இருந்து வந்திருக்கிறது இனியும் அந்தப் பிணைப்புத் தொடரும்.

கல்விப் பணியில் நீண்ட அனுபவமும் ஆற்றலும் கொண்ட கலாநிதி சி.க. எழில்வேந்தன் அவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட வர். தனது கல்விப் பணியை பதுளை ஊவா கட்டவளை தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து பின்னர் நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரியிலும் மாத்தளை இந்துக் கல்லூரியிலும் சிறந்த அதிபராகத் தன் கல்விப்பணியை நிறைவேற்றியதன் மூலம் மலையகத்தின் கல்வி வளர்ச்சியில் அளப்பெரும் பங்காற்றியிருக்கிறார். அதிலும் குறிப்பாக பதுளை ஊவா கட்டவளை பாடசாலையில் அவர் பணியாற்றிய 1985- 1990 காலப்பகுதி என்பது. கல்விசார் பணியாளர்களுக்கான அடிப்படை வசதிகள் இல்லாத. மலையகத்தின் கல்வி நிலை மிகவும் நெருக்கடிகளைச் சந்தித்த காலப்பகுதி என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். மலையகத்திற்கான கல்விப் பணியை நிறைவு செய்து கொண்டு தன்னுடைய சொந்த மாகாணத்தில் பணியாற்ற வேண்டும் என விருப்போடு வந்த கலாநிதி சி.க.. எழில்வேந்தன் அவர்களை. மத்திய கல்லூரியின் அதிபராக நியமிக்க வேண்டுமென எங்களது பழைய மாணவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் விரும்பியவாறு அவரை கல்லூரியின் அதிபராக்கி அவர் மூலமாக கல்வி வளர்ச்சிக்கான நல்ல பல வேலைத்திட்டங்களை நிறைவேற்றி முடித்திருப்பது பெருமைக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

ஆளுமையும். ஆற்றலும் மிக்க கலாநிதி சி.க. எழில்வேந்தன் அவர்கள் பல கல்விசார் பட்டத் தகமைகளையும் முகாமைத்துவப் பட்டத்தகமைகளையும் தன்ன கத்தே கொண்டிருப்பதோடு கலாநிதிப் பட்டத்தினையும் பெற்றிருப்பது எங்கள் அனைவருக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும். அந்த வகையில் மணி விழாக் காணும் எங்கள் கல்லூரியின் அதிபர் கலாநிதி சி.க. எழில்வேந்தன் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு. அவரது ஓய்வுக்காலம் சிறப்பான தாகவும். ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

கலாநிதி சி.க. எழில்வேந்தன் அவர்கள் தன்னுடைய ஓய்வுக் காலத்தினை இந்த நாட்டின் கல்வி மற்றும் சமூக மேம்பாட்டிற்கு பயன் தரக்கூடிய வகையில் பயனப் படுத்தவேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்வதோடு. அவர் ஆற்றிய பணிகளைக் கௌரவிக்கும் முகமாக மணிவிழாவினை ஏற்பாடு செய்த மணிவிழாக்குழுவிற்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

### மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



**திரு.தி.ஜோண் குயின்ரஸ்**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்
மாகாணக் கல்வித்திணைக்களம்.
வடமாகாணம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய அதிபர்களுள் ஒருவராகத் திகழ்கின்ற திரு சி.க.எழில்வேந்தன் அவர்களது பணியை நயந்து வெளி யிடப்படும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சி யடைகின்றேன்.

அதிபர் சி.க.எழில்வேந்தன் அவர்கள் 1985ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்றுக் கொண்டதிலிருந்து இன்றுவரை எமது சமூகத்துக்காக அளப்பரிய கல்விச் சேவையினை ஆற்றியுள்ளமை பாராட்டுக்குரியது. அதுமட்டுமன்றி தனது உயர் கல்வித் தகைமையினையும் வளர்த்து சிறந்த ஆசிரியராகவும். ஆளுமை மிக்க அதிபராகவும் கல்வி நிர்வாக சேவை அதிகாரியாகவும் திகழ்ந்தார். இலங்கையின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் சிறப்பான சேவையை வழங்கிய இவர் கடந்த ஒரு தசாப்த காலமாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் அளப்பரிய பணிகளைப புரிந்துள்ளார். மாகாணக்கல்வித் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்கும் தனது ஒத்துழைப்பினை வழங்கியுள்ளார். அதிபர் திரு.சி.க.எழில்வேந்தன் அவர்கள் தமது சேவைக்காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமையவும் வாழ்த்துகிறேன்.

### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



**திரு.மு.இராதாகிருஷ்ணன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்.
யாழ்ப்பாண கல்வி வலயம்.

ஆளுமையின் ஆதாரமான தோற்றத்துடன் அறிமுகமானவர் யாழ்ப்பாண மத்திய கல்லூரி அதிபர். அகவை அறுபதை அடைந்துள்ள சேவையாளன் கலாநிதி எழில்வேந்தன் அவர்கள். வன்னிமண்ணின் மைந்தன், முல்லைத்தீவின் முள்ளியவளைப் பிரதேசத்தில் பிறந்து வித்தியானந்தா கல்லூரியில் தனது இடைநிலைக் கல்வியைக் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரியாக வெளிவந்த ஒருவர். பல்கலைக்கழகக் காலத்தில் என்னுடன் அறிமுகமான எழில் வேந்தன் பின்னர் வடபகுதிக்கு வெளியில் ஆசிரியராகப் பல பாடசாலைகளில் கல்விப் பணிசெய்தவர்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளராக நான் பணியாற்றிய போது மீண்டும் சந்தித்தேன். அதுபோல் யாழ்ப்பாண வலய கல்விப்பணிப்பாளராகக் கடமையேற்றதன் பின்னர் 200 வருடங்கள் கண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக நல்லதொரு பண்பாளராகச் சந்தித் தேன். இப்பாடசாலையின் வளர்ச்சியில் இவருக்குப் பெரும்பங்கு உண்டு. ஆரம்பக் கல்விப்பிரிவு. இடைநிலைக்கல்வி உள்ள ஆண்களுக்கான தேசிய பாடசாலையாக இப்பாடசாலை உள்ளது. இதன் கல்வி முன்னேற்றம் அண்மைக்காலத்தில் சிறப்பாக உள்ளது. இவர் மகள். மகன் என நன்மக்கட்பேறும் அமையக்கிடைத்தவர் வாழ்த் துக்கள். முப்பத்தெட்டு வருடங்கள் கல்விப்பணியில் ஆசிரியராக. அதிபராக எனப் பணிபுரிந்த காலம் சாதனைகள் பல படைத்த காலம். யுத்தமும் சத்தமும் ஓயாத மிகுந்த கடினமான அக்காலத்திலும் இன்றைய காலத்திலும் இவர் ஆற்றிய பணிகள் இன்று வரை மாணக்கர். மக்கள் மத்தியில் பதிந்திருக்கும் அப்பாடசாலைகளில் பொறித்திருக்கும். உன்னத சேவைக்கு என் வாழ்த்துக்கள்.

கடைமையாற்றிய களங்களில் சமூகத்துடன் இணைந்து செயற்பட்ட நல்லதிபர். சாதனைகள்பல படைத்த விருதுகள்.பெற்றிட்ட சாதனையாளன். நிலை உயரட்டும். ஓய்வுகாலம் என்பது அரசபணிக்குமட்டுமே உழைப்புக்கும் உணர்வெளிச்சிக்கும் ஓயாத காலம். தொடரட்டும் தாங்கள் சமூகப்பணிகள். வாழ்க வளமுடன் நலமுடன்.

### யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபரின் வாழ்த்துச்செய்தி



**திரு.மு.இந்திரகுமார்**
அதிபர்
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் வாக்கிற்கு இணங்க யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நீண்டகாலம் அதிபராகவும். வாழ்நாள் அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் கலாநிதி. எஸ்.கே. எழில்வேந்தன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் என்ற வகையில் பேருவாகை கொள்கின்றேன்.

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட முதலாவது பாடசாலையான இக்கல்லூரி காலம் காலமாக புகழ்பூத்த அதிபர்களினால் நிர்வகிக்கப்பட் வந்தமைகுறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இவ்அதிபரின் காலமும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய காலமாகும். கல்வியிலும். விளையாட்டிலும் இணைப்பாட விதான செயற்பாடு களிலும் இக்கல்லூரி அளப்பரிய சாதனைகளை நிகழ்த்த காரணமாக விள்ங்கியவர். இவர் மத்திய கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் ஆசிரியராக இருந்து இவர் ஆற்றிய பணிகள் மூலம் இவரது ஆளுமையைக் கண்டு வியந்திருக்கின்றேன். "தோன்றின் புகழோடு தோன்றும்" என்னும் கூற்றுக்கு இலக்கணமாக இவர் சிறந்த அதிபராக வாழ்ந்து காட்டியதன் பேறாக அவரது குடும்ப வாழ்வும் சிறப்புடன் இருக்கக் காண்கிறேன்.

"முல்லையில் பறந்து - ஓர்
...க்க அதிபராய் - அறுபதை நிறைவு செய்தே
ஓய்வுபெறும் தங்களை - தங்கள்
ஓய்வுக்காலம் ...

### வாழ்த்துச்செய்தி



**திருமதி. C.S.R. செல்வகுணாளன்**
பிரதி அதிபர்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

"நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார்
பண்பு பாராட்டும் உலகு"

எனும் வள்ளுவனின் பொய்யாமொழிக்கு இணங்க மணிவிழாக் காணும் கல்லூரி நாயகன் கலாநிதி சி.க எழில்வேந்தன் அவர்கள் இனறு பாராட்டுக்குரியவராக விளங்குகின்றார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இரட்டை நூற்றாண்டின் முதல்வராகப் பணியாற்றிய பெருமை கொண்ட எமது அதிபர். கல்லூரி வரலாற்றில் தடம்பதித்த அதிபர் வரிசையில் ஒருவராக விளங்குகின்றார். கல்விப் பாரம்பரியத்தில் சிறந்தோங்கிய எமது கல்லூரியில் மிகச் சிறந்த உயர் கல்வித் தகைமையாளராக விளங்கி எமது கல்விச் சமூகத்துக்கு முன்மாதிரியாக விளங்கியவர் என்று கூறின் மிகையில்லை.

பழைய மாணவர்களை அரவணைத்துத் தனகுச் சரியெனப்பட்டதைத் துணிந்து முன்னெடுத்துச் சென்ற பெருமை மிக்கவர். கல்விச் செயற்பாடுகள் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் முறைசார். முறைசாராத் துறைகள் அனைத்திலும் தன்னுடைய கவனத்தைச் செலுத்தி ஒவ்வொரு விடயத்திலும் ஆழமாகச் சிந்தித்து தூரநோக்குடன் செயற்பட்ட ஒரு செயல்வீரராக எமது அதிபர் விளங்கினார். கல்லூரி யின் புகழை மங்காது மீண்டும் கல்விப்பெறுபேற்றின் மூலம் எமது கல்லூரியை உயர்நிலையில் புகழ் வைத்ததோடு பல கட்டடங்களை புனரமைத்தும் பௌதிக வளங்களிலும் உயர்வடையச் செய்து விளையாட்டு. கலை. கலாசார சமய. ஒழுக்கப் பண்புகள் போன்ற பல துறைகளிலும் உயர்நிலைக்குக் கொண்டு வருவதில் இவரது பணிமகத்தானது.

ஆசிரியர்கள் மாணவர்களுடன் நெருக்கமான உறவைப் பேணி அவர்கள் நலன்களில் அக்கறையுடன் செயற்பட்டு மனிதநேயம் மிக்க அதிபராகவும் கல்வி நிர்வாக சேவையில் அனுபவம் நிறைந்த நற்பண்பாளனாகவும் இக் கல்லூரியைச் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் வழிநடத்திய எமது அதிபர் தன் நிறைவான சேவையோடு ஓய்வு பெறுகின்றார். அவரின ஓய்வுக்காலம் சகல செல்வங்களுடன் நீண்ட ஆயுள் பெற்றுக் குடும்பத்தாருடன் குதூகலமாக விளங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

### வாழ்த்துச்செய்தி



**திரு.செந்தில் வடிவேல்**
பிரதி அதிபர்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

மரியாதைக்குரிய அதிபர கலாநிதி சி.க.எழில்வேந்தன் அவர்கள் யாழ் மத்திய கல்லூரியின் வரலாற்றில் ஒரு புகழ் பூத்த அதிபராவார். தனக்கெனத் தனியான இடத்தை வரலாற்றுத்தடத்தைப் பதித்த சாதனையாளராக நான் இவரை நோக்கு கின்றேன். இக்கல்லூரியின் சிறப்பான பெருமைக்குரிய ஒவ்வொரு படிநிலைகளிலும் உழைப்பு . ஆத்மார்த்தமான சேவை வியக்க வைக்கிறது. மனிதநேயம் மிகக் மகத்தான மானிட பண்புகள் நிறைந்த பண்பாளன் ஆசிரியர்களின் மனநிலை அறிந்து மனிதாபிமானத்துடன் பழகுபவர். மாணவர்களின் மனதறிந்து அவர்களின் முன்னேற்றத்திற்கு முன்னின்று உழைத்தவர். கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் கணிதப்பிரிவு.தொழினுடபப்பிரிவு ஆகியவற்றில மாவட்ட மட்டத்தில முதலாம் இடததை மத்தியின் மாணவச்செல்வங்கள்பெற்றதன் மூலம் மத்திய கல்லூரி நிமிர்ந்து நிற்பதற்குக்காரணமாக இருந்து வழிகாட்டிய சாதனை வீரர்.மனி தருள் மாணிக்கமான எமது கல்லூரியின் அதிபர் தனது பணி நிறைவுறும் காலத்தின் பின்பும்சிறப்பான சமூக சேவையாற்றி எம் சமுதாயத்தை வழிநடத்துகின்ற மகத்தான பணியை ஆற்ற வேண்டும் என்ற அன்பான வேண்டுகோளையும் இத்தால் விடுத்து இளைப்பாறும் காலத்தில் மகிழ்ச்சியாகவும். இன்ப மயமாகவும். சிறந்த பொருளாதார வளம் பெருகி இனிமையாக வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

### வாழ்த்துச்செய்தி



**திரு.க.ரஜீவன்**
ஆசிரியர் வட்டத்தலைவர்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

"காலங்கள் மாறினாலும் கனமாய் நின்றுஉரைத்துக் கொண்டே இருப்பவை ஒருவர் செய்த சேவையே" அந்த வகையில் மனித வாழ்வின் பல துறைகளையும் வியாபித்து நிற்கும் இருநூறாண்டு கடந்து பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மதிப்பார்ந்த முதல்வர் அவர்களின் மணிவிழா வாழ்த்து மலரில் ஆசிரிய வட்டம் சார்பாக வாழ்த்தினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எமது பாடசாலையின் அதிபர் என்பதற்கு அப்பால் ஆசிரியர்களிடம் ஒரு சிறந்த ஆலோசனை யாளனாகவும். சிறந்த வழிகாட்டியாகவும். மனிதநேயம் மிக்கவராகவும் ஆசிரியர்களின் மனங்களில் நிறைந்தவர். எமது பாடசாலை மாணவர்கள் மாகாண ரீதியிலும் தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் விளையாட்டில் ஒரு மைல் கல்லை எட்டிப் பார்த்தது. இவருடைய வழிகாட்டலிலேயே என்பதை மறைக்கவும் முடியாது. மறுக்கவும் முடியாது. கல்லூரியின் பௌதீக வள வளர்ச்சியிலும் அதிபரின் அயராத முயற்சியும். கடின உழைப்பும் பிரதிபலிக்கின்றன.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" குறள் எண் - 517

என்ற குறளுக்கமையத் தான் எண்ணிய காரியங்களைச் சரியாகவும் கனகச்சிதமாகவும் பணியாற்றி வெற்றி கண்டார் எனவே எமது கல்லூரியின் அதிபரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வற்றாப்பளை கண்ணகை அம்மனை வேண்டுகின்றேன்.

## ஆசிரியர் வட்டம்
### யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

(CS 24098) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS (IFB)
# TEACHING HOSPITAL, JAFFNA

| S.No | Item Code | Non-Refundable tender fee (Rs.) | Supply, Installation, Maintenance & Commissioning of |
|---|---|---|---|
| 1. | JTH/SA/P02/HDWE & WKSP/2023-01 | 1000.00 | Supply of Building & Workshop Items |
| 2. | JTH/SA/P14/PROSTHETIC/2023-01 | 1,000.00 | Supply of Prosthetic & orthotic material |
| 3. | JTH/SA2/OFF-FUR/2023/01 | 1,000.00 | Supply of Office Furniture |
| 4. | JTH/FD/QUO/2023/01 | 1,000.00 | Supply of Printed Forms |
| 5. | JTH/SA/BME-INSTRUMENTS/2023 | 1,000.00 | Supply of Biomedical Instruments / Tools |
| 6. | JTH/SA2/COM/2023/01 | 1,000.00 | Supply of computer & laptop |

1. Sealed bids for the supply of the under mentioned Category will be received by Chairman, RegionalProcurement Committee, Teaching Hospital, Jaffna.
2. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) method.
3. Only the sole nominated representative / accredited agent of manufactures Offered for the Sri Lanka market are eligible to participate in this bid.
4. Sealed bids should be made on a complete set of bidding documents for the project in original shall be sent by the Registered Post or shall be deposited in the tender box addressed to the Chairman. Regional Procurement Committee, and Teaching Hospital Jaffna on or before 10.00 am on 10th of April. 2023.
5. Bid documents should be obtained from Accountant, at the above address from 24.03.2023 to 06.04.2023 between 9.00 am and 3.00 pm during working days on submission of the following.
   a) A written application to the Chairman, Regional Procurement Committee, Teaching Hospital Jaffna.
   b) Certificate of Business Registration (Certified Photocopy)
   c) Upon payment of the non-refundable tender fee stated above in cash to the Director Teaching Hospital, Jaffna.
6. Bids will be opened immediately after the closing of bids at the office of the Chairman / Director, bidders or their representatives permitted to be present when bids are opened.
7. Bid Documents may be inspected free of charge at the Procurement Division in Our Hospital.
8. Further information could be obtained from Director/Accountant TH /Jaffna (Tel - 021 222 3149 / 021 221 2482)

Director / Chairman.
RPC/Teaching Hospital, Jaffna.
23.03.2023

(cr.39514) (2.6)

## புகையிலைச் செய்கை மழையால் பாதிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாக பரவலாகப் பெய்த மழையால் புகையிலைச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குடாநாட்டில் தீவுப்பகுதி மற்றும் வலி.மேற்கு , கிழக்குப் பகுதிகளில் இம்முறை கூடுதலாகப் புகையிலைச் செய்கை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு அறுவடை பணிகள் இடம்பெறுகின்றன.

வெயிலில் உலரவிடப்பட்ட புகையிலைகள் கடந்த சில தினங்களாக பெய்த திடீர் மழையால் நனைந்து பாதிப்படைந்துள்ளன என செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். (ச-17)

## மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

நெடுந்தீவு கிழக்கு, மாவிலித்துறை வீரபத்திர பிள்ளையார் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.40 மணிமுதல் 9.12 மணி வரை இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேக பிரதம குருவாக சிவஸ்ரீ. சோ.வாகீஸ்வரக் குருக்கள் கலந்துகொள்ளவுள்ளார் என்று ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (ஒ.14)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு விசா ஆலோசனை

கனடா. லண்டன் (தாதிகளுக்கான குடும்ப விசா)
அவுஸ்திரேலியா. பிரான்ஸ். இத்தாலி. றொமேனியா. போலந்து
போன்ற நாடுகளுக்கான வேலைவாய்ப்பு விசாக்கள்
பெற்றுக்கொள்ள ஆலோசனைகள் வழங்கப்படும்.

**077 557 4190**

## UNIVERSITY OF JAFFNA – SRI LANKA

### INVITATION TO BIDS
### SUPPLY& INSTALLATION OF DIESEL GENERATOR
### UNIVERSITY OF JAFFNA
### UJ/F/NCB/01/2023

Chairman, Department Procurement Committee, University of Jaffna, Thirunelvely invites sealed bids from eligible bidders for **Supply & Installation of Diesel Generator at Faculty of Management Studies & Commerce, University of Jaffna** as described below.

01. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure.
02. Bidder should have at least three years' experience in the relevant field in Sri Lanka.
03. Interested eligible bidders may obtain further information from the Assistant Bursar / Supplies **(Contact No: 021-2220962)** of the University of Jaffna, and inspect the bidding documents at the Supplies I, Finance Branch, University of Jaffna from **9.00 am to 3.00 pm from the date of 28/03/2023 to 17/04/2023 at free of charge.**
04. A complete set of bidding documents in English may be purchased by interested bidders on submission of a written application to the Assistant Bursar / Supplies I, or could be downloaded from the University website www.jfn.ac.lk upon payment of a non-refundable fee of Rupees **3,500/=** either in cash at the Shroff Counter of the University of Jaffna or to the credit of Peoples' Bank University of Jaffna Branch, account no: **970000060000276.** The cash receipt of the Shroff or the bank deposit slip to be attached with the bidding documents. The documents may be purchased until **2.30 pm from 28/03/2023 to 17/04/2023.**
05. Bids must be delivered in duplicate to be addressed **"The Bursar, University of Jaffna, Thirunelvely,"** on or before **2.00 pm on 18/04/2023.** Please indicate the **"Supply & Installation of Diesel Generator - UJ/F/NCB/01/2023 –18/04/2023"** on the left-hand corner of the envelope.
06. All bids must be accompanied by a Bid Security addressed to the, **"Vice Chancellor, Department Procurement Committee, University of Jaffna,** valid for 120 days **(15/08/2023)** from the date of the bid opening as specified in the following Table.

**SUPPLY & INSTALLATION OF DIESEL GENERATOR AT FACULTY OF MANAGEMENT STUDIES & UNIVERSITY OF JAFFNA**

| Serial No | Description Items | Quantity | Bid Security (Rs) |
|---|---|---|---|
| 01 | Diesel Generator | 01 | 85,000.00 |

07. Pre-Bid meeting will be held on **10/04/2023 at 10.00 am.** in the **Board Room of University of Jaffna**
08. The bids shall be deposited in the **'Tender Box'** available in the **Finance Branch** of the University, or sent under Registered Cover to be received on or before the deadline to the address given Clause No.5.
09. Late bids will be rejected.
10. The bids will be opened at **2.00 pm on 18.04.2023,** in presence of the bidders or their authorized representatives who choose to attend the bid opening at the **Board room of the University.**

**The Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**Thirunelvely.**
**TP. / Fax No: 021-2229603, 021-2220962**

## பெயர்மாற்றம்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தில் வசிப்பவராகிய **ஜீவரத்தினம் யசோ** ஆகிய நான் எனது பெயரை இன்று தொடக்கம் **யசோ** என்பதற்குப் பதிலாக **யசோதா** என மாற்றம் செய்துள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு வெளிப்படுத்துகின்றேன்.

**- யசோதா -**

(CS/24164)4,6

## வான் விற்பனைக்கு

றொயாறோ சுப்பர் GL 250 Auto கியர் நீள மொடல் (Long Mode) வான் விற்பனைக்குண்டு.

**077 592 5450**

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சித்திரைப் புத்தாண்டு வரை !

# ஜவுளிப் பண்டிகை

### ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்

பட்டுச்சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
டொப், புறொக்
சேட் மற்றும்
சிறுவர் சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகள்.



இது பிரமாண்ட ஜவுளித்துறையின் சாம்ராஜ்யம்


## இந்தியன் செலக்ஷன்

காலம்: 17.03.2023 முதல் 14.04.2023 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 - 08 - 1944



மறைவு
22 - 03 - 2023

## திரு. கில்பேட் ஜெயசிங்கம்

**(இளைப்பாறிய நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்)**

மிருசுவிலை பிறப்பிடமாகவும் இல.42, 2ம் ஒழுங்கை சூசைப்பிள்ளையார் குளம் வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட கில்பேட் ஜெயசிங்கம் நேற்றுமுன்தினம் (22.03.2023) புதன்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் ஆரோக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செபஸ்தியாம்பிள்ளை மரிய ஆரோக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், பற்றிமா ராஜினியின் அன்புக் கணவரும், அல்வின்ஜெகான் (சுவிஸ்), அனற்ஜென்சி (சுவிஸ்), யூடி பிறின்சி (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குயின்ரன் (சுவிஸ்), செல்வரூபி (சுவிஸ்), கடோற்கசன் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், எர்வின் (சுவிஸ்), செவின் (சுவிஸ்), யமிசன் (சுவிஸ்), அஜேன் (சுவிஸ்), அகின் (சுவிஸ்), லியரன்சி (வவுனியா), நரேஸ்பியன் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாத்தாவும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், ஒலிவற்றாணி மற்றும் லீலா (கனடா), றூபி (கொழும்பு), இராஜசிங்கம் (யாழ்ப்பாணம்), றெட்ணசிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் இன்று (24.03.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் வவுனியா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்**
**வவுனியா.** **குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவுதின ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



தோற்றம்
26 - 05 - 1949

மறைவு
04 - 04 - 2022

கடந்த 04.04.2022 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

## அமரர் திருமதி கந்தசாமி கமலாதேவி

**திதி: பங்குனிமாத வளர்பிறை திருதியை**

அவர்களின் ஓராண்டு நினைவுதினம், இன்று (24.03.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பும் பண்பும் நிறைந்த எங்களது அன்புத் தெய்வமே!
இன்ப வாழ்வில் இதயம் மகிழ்ந்திட இனிக்கும் நினைவுகளுடனே
ஆண்டு ஒன்று ஆயிற்றோ நீவிர் எம்மைவிட்டுப் பிரிந்து?
சொந்த பந்தங்கள் வாழ்வாதாரமாய் மகிழ்வுடன் வாழ்ந்திருக்க
உந்தனையே அர்ப்பணித்தீரே என்றும் உம்மை நினைந்தே
நாம் அஞ்சலி செய்கின்றோம்! பெற்றிடுக சாந்தி ! ஓம் சாந்தி

**வீரபத்திரர் கோயிலடி, குடும்பத்தினர்.**
**4ஆம் வட்டாரம், நயினாதீவு.**


(CS24172) 1-6

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

## சின்னராசா-கிருஸ்ணகுமார்

**(ஓய்வுபெற்ற முன்னாள் உப அதிபர் - யாழ். இந்து கல்லூரி)**



தோற்றம் : 12.05.1947 மறைவு : 22.03.2023

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் இல.337, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னராசா கிருஸ்ணகுமார் (ஓய்வுபெற்ற முன்னாள் உப அதிபர், யாழ். இந்து கல்லூரி ) கடந்த (22.03. 2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராசா பத்தர் சௌந்தரிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராஜகோபால் பத்தர் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜாவின் அன்புக் கணவரும், தர்ஷினி (துபால் அலு வலகம் அவுஸ்திரேலியா), நிசாந்தன் (மென்பொருள் பொறியியலாளர்- அவுஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையும், யசோதரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), சாரண்யா (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற ஜெயக்குமார் (மன்னார்) மற்றும் சாந்தகுமார் (அபிராமி ஜுவல்லர்ஸ் - மன்னார்), தனலெட்சுமி (பருத்தித்துறை), இரட்ணகுமார், (லக்சுமி - ஜுவெல்லர்ஸ், மன்னார்), உதயகுமார் (வவுனியா), மகாலெட்சுமி (மாலா- நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி இராசநாயகி, சுசிலா, கிருஸ்ணவேணி (வேணி), ஜெயவரத்தனராஜா (ஜெயாஸ் ஜுவெல்லர்ஸ், பருத்தித்துறை), விஜயா, பேரின்பம் (நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், றொசாந், நிதுரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (26.03.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில்அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக் கத்திற்காக வண்ணை கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.337, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**யசோதரன் - 0061449696385**
**நிசாந்தன் - 0061474847009**
**தர்ஷினி - 0061449878375**
**சாந்தகுமார் - 0777865549**
**இரட்ணகுமார் - 077 2768240**

(CS 24171) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், மார்ச் 24

வண்ணை வெள்ளாந்தெரு நல்ல தண்ணீர் கிணற்றடி அருள்மிகு ஞான வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.20 மணிமுதல் மு.ப. 10 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் எம்பெருமானுக்கும், விநாயகர், மூர்த்திகள் சுவானம், பலிபீடம், மகாலட்சுமி, தன்வந்திரி, நவக்கிரக தேவர்கள் ஆகிய பரிவார மூர்த்திகளுக்கும் திருக்குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகும் பூர்வாங்க கிரியைகளைத் தொடர்ந்து நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிவரை எண்ணெய்க்காப்பு சாத்துதலும் ஏனைய கிரியைகளும் நடைபெறும். (அ-ம)

### இந்திய...

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளில் இருந்து பலநூறு மீனவர்கள் இந்தப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர். அத்துடன், சிவில் சமூகத்தினர், மதகுருக்கள், பொதுமக்கள், தொண்டு நிறுவனத்தினர் என்று பல தரப்பினரும் இந்தப் போராட்டத்தில் எழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

'எமது கடல்வளம் விற்பனைக்கான பொருள் அல்ல. வடக்கு கடற்பகுதியை குத்தகை அடிப்படையில், இந்திய மீனவர்களுக்கு தாரைவார்ப்பதை நாம் அனுமதிக்கமாட்டோம். வடமாகாண மீனவர்களின் பொருளாதாரத்தை, வாழ்வாதாரத்தை கேள்விக்கு உட்படுத்தும் இவ்வாறான செயல்களுக்கு எதிராக அரசாங்கத்துக்கு எதிராக அடுத்தடுத்த நாள்களில் மிகப்பெரும் போராட்டம் முன்னெடுக்கப்படும். உண்மையில் பிறநாட்டு மீனவர்கள் அத்துமீறி நுழைந்தால் அரசாங்கம்தான் அவர்களை எச்சரித்தும், உள்நுழைவதைத் தடைசெய்யும், போராட்டங்களை நடத்தும். ஆனால், எமது நாட்டில் நாங்கள் அரசாங்கத்துக்கு எதிராகவும் இந்திய மீனவர்களுக்கு எதிராகவும் இருமுனைப் போராட்டங்களை மேற்கொள்ளவேண்டியிருக்கின்றது' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் ஏற்பாட்டுக் குழுவினரால் ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காக மன்னார் மாவட்டச் செயலரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது. (அ-ம-213,60)

### சிறிலங்கா...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறிலங்காவில் ஆயுத மோதல் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் ஆகியிருக்கும் இந்நிலையில், இலங்கையின் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் சிங்கள பௌத்தமயமாக்கல் பெரும் வேகமெடுத்துள்ளது. நீதிமன்றக் கட்டளையை மீறி, தமிழரின் தொன்மையான வழிபாட்டிடமான குருந்தூர் மலையானது அழிக்கப்பட்டு அங்கு ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்டிருக்கிறது. இப்படியாக தமிழர் தாயகமெங்கிலும், குறிப்பாக சிங்களவர்கள், பௌத்தர்கள் இயல்பாகக் குடியிருக்காத பகுதிகளில்கூட, பௌத்த மத ஆலயங்கள் சிறிலங்கா அரச இயந்திரத்தின் துணையுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

நாயாறு, தையிட்டி, நாவற்குழி, மாங்குளம் சந்தி, கச்சல் சமளங்குளம், கன்னியா வெந்நீரூற்று என்பன இவ்வாறு தமிழர் தாயக நிலத்தில் பௌத்த ஆலயங்கள் அமைக்கப்பட்டுவரும் சில இடங்களாகும். இவற்றுள் பெரும்பாலானவை சிறிலங்கா அரச ஆதரவோடு, தமது அரசின் நீதிமன்ற கட்டளைகளை தாமே மதிக்காது, உதாசீனப்படுத்தி, கட்டமைக்கப்பட்டுவரும் ஆலயங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு சில இடங்களில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த ஆலயங்களைச் சூழ இருக்கும் பகுதிகளில், தமிழர் தாயகத்தின் இனப்பரம்பலை திட்டமிட்டு மாற்றியமைக்கும் முனைப்போடு, சிறிலங்கா அரச ஆதரவுடன் சிங்களக் குடியேற்றத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மயிலத்தமடு மற்றும் மாதவனை மேய்ச்சல் நிலங்களில் தமிழர்கள் காலங்காலமாக 3 லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்குப் பயன்படுத்திவரும் நிலையில், நீதிமன்ற உத்தரவை மீறி, அங்கு சட்டவிரோதமான முறையில் சிறிலங்கா அரச ஆதரவோடு சோளப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் சிங்களவர்களால், தமிழர்கள் மேய்ச்சல் நிலங்களில் இருந்து துரத்தப்படுகின்றனர். உண்மையில் இந்த தமிழர்களின் பாரம்பரிய புராதன அடையாள நிலமானது, சிங்கள - பௌத்த மயமாக்கலுக்கான பகுதியாக சிறிலங்கா அரசினால் குறிவைக்கப்பட்டு, அங்கு இனப்பரம்பல் மாற்றப்பட்டு வருகிறது.

'மாதுருஓயா வலதுகரை அபிவிருத்தித் திட்டம்'' எனும் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டமானது அந்தப்பகுதியில் இருக்கும் தமிழர்கள் இனச்சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சிங்களவர்களை குடியேற்றி இனப்பரம்பலை மாற்றவே சிறிலங்கா அரசினால் பயன்படுத்தப்படுகிறது. புராதன தமிழ் சைவ வழிபாட்டிடமான வெடுக்குநாரி மலையை பௌத்த புராதன பிரதேசமாக மாற்றியமைத்து பிரகடனப்படுத்தும் நோக்குடன், அப்பகுதியை சிறிலங்கா அரசின் தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்தியிருக்கிறது.

ஆகவே, சிறிலங்காவுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புத் தூதுவர் ஒருவரை நியமிக்குமாறும், சிறிலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு பரிந்துரைக்குமாறும், தமிழர் தேசமான ஈழத்தினை, சுயாட்சி இன்னமும் கிடைக்கப்பெறாத பகுதியாக அங்கீகரிக்குமாறும், இந்த அவையின் அங்கத்துவ நாடுகளிடம் கோருகிறோம் - என்றார். (அ-ம)

### தபால்...

அதற்கமைய, எதிர்வரும் 28, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதிகளில் நடத்தப்படவிருந்த தபால்மூல வாக்களிப்பை நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடன் தேர்தல்கள் ஆணைக்குழு விரிவான கலந்துரையாடலை நடத்தியுள்ளது. இந்தச் சந்திப்பின்போது அரசியல் கட்சிகளின் செயலாளர்களால் நான்கு அம்ச யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலைமைகளில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலை நடத்தமுடியாது என்பதால், உறுதியான திகதி ஒன்றை அறிவித்து தேர்தலை ஒத்திவைத்தல், வாக்களிப்புக்குத் தேவையான வசதிகளையும் பின்புலத்தையும் உறுதி செய்துகொண்டதன் பின்னர் தேர்தல் தினத்தை அறிவித்தல் என்பன அந்த யோசனைகளில் அடங்கும். எனினும், இந்த விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டச்சிக்கல்கள் ஏற்படக்கூடும் என்பதால், தேர்தலை ஒத்திவைக்கமுடியாது எனவும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- தேர்தல் தொடர்பில் அரசமைப்புப் பேரவை, நிறைவேற்றுத்துறை மற்றும் தொடர்புடைய ஏனைய தரப்பினருடன் சுமுகமாக கலந்துரையாடி ஏற்படுத்திக்கொள்ளப்படும் இணக்கப்பாட்டுக்கமைய, தேர்தல் தினத்தை அறிவிக்கவேண்டும் எனவும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து, ஏற்கனவே திட்டமிட்ட திகதிகளில் தபால்மூல வாக்களிப்பை நடத்தாதிருப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (அ-ம)

### யாழ்ப்பாணப்...

பல்கலைக்கழகப் பராமரிப்புக் கிளையின் களஞ்சியசாலையில் இருந்து மின் இணைப்பு சாதனங்கள் மற்றும் கட்டடப் பொருள்கள் நீண்ட காலமாகக் களவாடப்பட்டுள்ளன. குறுகிய காலத்தினுள் சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான மின் இணைப்பு வயர்கள் கட்டுக்கட்டாகக் காணாமற்போனதை அறிந்துகொண்ட நிர்வாகம், இது குறித்துப் பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்தே கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

பராமரிப்புக் கிளையில் பணியாற்றும் அமைய ஊழியர்கள் சிலரே இந்தக் கையாடலில் ஈடுபட்டார்கள் என்று மேலதிகாரிகள் குற்றஞ்சாட்டி அது தொடர்பில் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு, அந்த அமைய ஊழியர்கள் மீது பழியைப்போட்டு மூடிமறைக்க முயன்ற போதிலும், ஊழியர்களிடமிருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அதிகாரிகள் சிலரும் இக்கையாடலுடன் தொடர்புபட்டிருப்பது தெரியவந்துள்ளது. அதன் பின்னரே பொலிஸாரின் உதவி நாடப்பட்டதாகவும், பொலிஸார் பல்வேறு தரப்பினரிடமும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (அ-ஒ,5)

### கஞ்சா...

பியகம மதுவரித் திணைக்களத்தினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பியகம மதுவரித் திணைக்களத்தினர் தர்மகேணிப் பகுதிக்கு வருகைதந்து, தம்மை யார் என்று வெளிக்காட்டாமல் கஞ்சா வர்த்தகத்தில் ஈடுபடுவது போன்று மேற்படி பொலிஸ் அலுவலர்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளனர். இதன் தொடர்ச்சியான நடவடிக்கைகளை அடுத்தே பொலிஸார் இருவரும் 2 கிலோ 250 கிராம் கஞ்சாவுடன் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (அ-ம,113,214,26)

### மதக்...

[illegible] குழுவினரால் இன்றையதினம் முன்னெடுக்கப்படவுள்ள கூட்டம், மதமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது என்று தெரிவித்து இன்றையதினம் ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை முன்பாக, சிவசேனை அமைப்பினரின் ஏற்பாட்டில் இன்று மு.ப. 10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. திட்டமிடப்பட்ட முறையில் இந்துக்களை இலக்குவைத்து இந்த மத மாற்றம் முன்னெடுக்கப்படுகின்றது என்று சிவசேனை அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

### இன...

யாழ்ப்பாணம், ஆரியகுளம் நாகவிகாரையில் நேற்று ஆரம்பமான இந்த நடைபயணம் தெய்வேந்திரமுனையைச் சென்றடையும்வரை தொடரவுள்ளது. (அ-ம)

### ஏழு...

அதற்கமைய, சிறிலங்கன் விமான சேவை நிறுவனம், ரெலிகொம், சிறிலங்கா காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கொழும்பு கிராண்ட் ஹியாட், ஹில்டன் ஹோட்டல், லிட்ரோ எரிவாயு நிறுவனம், லங்கா ஹொஸ்பிட்டல் ஆகியவற்றின் பங்குகளே விற்பனை செய்யப்படவுள்ளன. நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு, துரித வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, கட்டமைப்பு மறுசீரமைப்புகளை நடைமுறைப்படுத்தும் செயன்முறையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அதற்கமைய, பல ஆண்டுகளாக பொருளாதாரத்துக்குச் சுமையாகக் காணப்படும் துறைகள் அடையாளம் காணப்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் என்று நிதி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### சகோதரியின்...

பணத்தில், மோட்டார்சைக்கிள் தொலைபேசி என்பவற்றைக் கொள்வனவு செய்துள்ளார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சந்தேகநபர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-ம-26)


### ஆசிரியசேவைக்குள்...

உத்தரவிட்டுள்ளனர். அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இணைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு உள்வாங்குவதற்காக போட்டிப் பரீட்சையை நடத்த மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை ஆட்சேபணைக்குட்படுத்தி, 4 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

போட்டிப் பரீட்சைக்கான வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானது எனவும், இதற்காக அமைச்சரவை உரிய முறையில் தீர்மாணங்களை மேற்கொள்ளவில்லை எனவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமனம் வழங்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் வெற்றிடங்கள் காணப்பட்ட பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக உள்வாங்கப்பட்டிருந்தனர்.

எனினும், அவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில், போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக நியமிப்பதை ஆட்சேபணைக்குட்படுத்தி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருதடி விநாயகருக்கு கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 24
வரலாற்றுப் பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
25 தினங்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு சப்பறத் திருவிழாவும், சித்திரைப் புத்தாண்டு தினமான 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல்12 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக்க உற்சவமும் இடம் பெறும் என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.
(ஒ-14-66)

## வழிகாட்டல் கருத்தரங்கும் நடமாடும் சேவையும்

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் சுற்றுலாசேவை வழங்குநர்களைப் பதிவு செய்வது தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கும் நடமாடும் சேவையும் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.
வடமாகாணத்தில் இயங்கும் சுற்றுலா தொடர்பான சேவை வழங்குநர்களான சொகுசு விடுதிகள், உணவகங்கள், வீட்டுடன் கூடிய தங்குமிடங்கள், பங்களாக்கள், விருந்தினர் தங்குமிடங்கள் மற்றும் பயண முகவர்கள் போன்றவற்றை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவு செய்யும் முகமாக இந்தச் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.
இதில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் வடமாகாண சுற்றுலாப்பணியகத்தின் 021 2217311 என்ற அலைபேசி இலக்கம் அல்லது 077 4628355 என்ற வட்ஸப் இலக்கத்துடன் தொடர்புகொண்டு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பெயர், விவரங்களை முன்பதிவு செய்யுமாறு வடமாகாண சுற்றுலாப்பணியகத்தின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.
(ஒ-14)

கல்விக்கு இடையூறென்றால்

## பாடசாலை நடவடிக்கைகள் அத்தியாவசிய சேவையாகும்

**ஜனாதிபதி எச்சரிக்கை**

கொழும்பு, மார்ச் 24
கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கப்படுமாயின், பாடசாலைகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்த நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
2023ஆம் ஆண்டுக்காக சீன அரசாங்கத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட பாடசாலை சீருடைகள் மற்றும் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மூலப்பொருள்களைக் கொண்டு அரச அச்சு கூட்டுத்தாபனத்தினாலும் உள்நாட்டு விநியோகத்தர்களினாலும் அச்சிடப்பட்ட பாடப் புத்தகங்களை பகிர்ந்தளிக்கும் தேசிய நிகழ்வு கொழும்பு சங்கமித்தா மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி ரணில் இவ்வாறு தெரிவித்தார்.
(அ-ம)

இந்தியப் படகுகள் அரசுடமை:

## பரு.நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கு மேல்நீதிமன்று இடைக்காலத்தடை!

யாழ்ப்பாணம், மார்ச் 24
இந்திய இழுவைப் படகுகளை அரசுடைமை ஆக்குவதற்கு எதிராக, அவற்றின் உரிமையாளர்களால், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனுக்களைப் பரிசீலித்த நீதிமன்றம், அரசுடைமை ஆக்கும் நடவடிக்கைக்கு இடைக்காலத் தடையுத் தரவு பிறப்பித்துள்ளது.
இந்திய மீனவர்களின் சார்பாக திருமதி சாரா ஹரிப்பிரவீனின் அனுசரணையில் சட்டத்தரணி கே.வி.எஸ்.கணேசராஜன் முன்னிலையாகினார். அவரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களின் அடிப்படையிலேயே, மேற்படி இந்திய இழுவைப் படகுகளை அரசுடைமை ஆக்குவது தொடர்பில் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட கட்டளைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதற்கு இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அரச தரப்பில் சட்டத்தரணி அர்ஜுன் முன்னிலையானார்.
(அ-ம)

## மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் இன்பமதி பாலசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயப் பாடசாலை அபிவிருத்திப் பொறுப்பாளர் தி.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.
(ஒ-14-66)

*மின்சாரம்...*

ழந்துள்ளார். சுதாஜினி (வயது - 38) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
முற்றத்துக்கு மின்குமிழைப் பொருத்துவதற்காக அமைக்கப்பட்டிருந்த வயரில் சேதாரம் ஏற்பட்டு மின்கசிவு இருந்துள்ளது. அந்தப் பகுதியைப் பிடித்தபோதே மின்சாரத்தால் தாக்கப்பட்டு மேற்படி பெண் உயிரிழந்துள்ளார்.
சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.
(அ-ம)

**EMPTY சிலிண்டர் விற்பனைக்கு**
386, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில் EMPTY சிலிண்டர்கள் மலிவான விலையில் விற்பனைக்குண்டு.
**077 220 8432, 077 390 2994**

**பெண் வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்
**மென்பான உற்பத்தி நிறுவனம் ஒன்றிற்கு உற்பத்திப் பகுதியில்**
வேலை செய்வதற்கு பெண் வேலையாள்களதேவை.
வயது எல்லை: 20 - 50
தொடர்புகளுக்கு: **021 221 3788**
**075 466 5555**

**BARATHY**
பிரதான வீதி - சித்தன்கேணி
(சிவன்கோயில் அருகில்)
**தரம் 8 தொடக்கம் 11 வரை**
யாழ். மாவட்டத்தின் தனித்துவமான திறமைமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலில்
**புதிய வகுப்புகள்**
**நாளை ஆரம்பம் 25.03.2023 சனி காலை 8.00 மணி**

| | |
|---|---|
| விஞ்ஞானம் | Mr. தேவா<br>Mr. சற்குணராஜா |
| கணிதம் | Mr. சிவரூபன் |
| தமிழ் | Mr. திருச்சிவேந்தன் |
| ஆங்கிலம் | Mr. சந்திரமௌலி |
| வரலாறு | Mr. சுதன் |
| I.C.T | Mr. தேவதர்ஷன் |
| சமயம் | Mr. பாபுதரன் |
| வணிகமும் கணக்கீடும் | Mr. வாகீசன் |
| குடியுரிமை/புவியியல் | Mr. சுதர்ஷன் |

**உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.**
மேலதிக தொடர்புகளுக்கு:
**077 3763 511**

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

மலர்வு
13 • 11 • 1956



உதிர்வு
26 • 03 • 2020

"ஈச்சமோட்டையின் தத்துவஞானி" என்று சான்றோர்களால் அழைக்கப்பட்ட

**சத்தியானந்தசிவம் தவசீலன் (J.P)**
**(தவம்)**

அவர்கள் பங்குனி வளர்பிறை திருதியையில் இவ் வாழ்வின்ன நிறைவு செய்து மூன்று வருடங்கள் ஓடி மறைகின்றது. எனினும் அவரின் முத்தான சிந்தனைகளுடன் அவர் எம்முடனே கலந்துள்ளார் என்ற உணர்வு எம்மோடு தொடர்கின்றது.
"அன்பே சிவம்"
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
**நினைவுகளுடன்,**
**குடும்பத்தினர்.**
(CS/24133)4.6

DHL வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
சகல நாடுகளுக்கும் கடிதங்கள்
3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S. Road, Jaffna.
**0777 55 45 28**
குறிப்பு: வேலையாட்கள் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.